**இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகள் - 2024**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை மகாவலி அதிகாரசபை (“அதிகாரசபை”) மற்றும் நிருவகிக்கும் கம்பனிகள் அடங்கிய குழுமத்தின் (“குழுமம்”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தினதும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதிகாரசபை மற்றும் குழுமத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால்

அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரஅதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு ஏற்படும் தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை மகாவலி அதிகாரசபை

1.5.1.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 79 இன் பிரகாரம் பீ வலயத்தின் ரூபா 51.24 மில்லியன் தொகை பெறுமதியான 400 நாட்களுக்கான நிலையான வைப்புக்கள் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், குறுகிய கால வைப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2025 ஆண்டின் பீ வலையத்தின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது சரி செய்வேன். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் 400 நாட்களுக்கான நிலையான வைப்புக்கள் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி 22 இன் பிரகாரம் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பிற்காலக் கிரயம் அந்தச் சொத்துக்களின் பெறுமதிகள் அதிகரிக்கும் என இனங்காண வேண்டியிருந்த போதிலும், போவதென்ன பொறுப்பு பொறியியலாளர் அலுவலத்தின் ரூபா 4.83 மில்லியன் தொகை, ஈ வலையத்தின் மூன்று விடயங்கள் தொடர்பாக ரூபா 2.35 மில்லியன் தொகை, வலவ வலையத்தின் 07 ஒப்பந்த வேலை தொடர்பாக ரூபா 17.09 மில்லியன் தொகை மற்றும் தலைமை அலுவலகத்தின் ரூபா 2.04 மில்லியன் தொகைக்கான மூலதன தன்மையிலான செலவுகள் மூலதனப்படுத்தாமல், வருவாய் செலவுகள் என காட்டப்பட்டிருந்தது. | இதனை 2025 நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பபேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மூலதனச் செலவுகள் உரிய சொத்துக்களின் பெறுமதி அதிகரிப்பு என இனங்காண வேண்டும். |
| (இ) | எல் வலையத்தின் மற்றும் வலவ வலையத்தின் காணி கையாடல் கட்டணம் மற்றும் விக்டோரியா வலையத்தின் உக்குவல வாரியபொல வத்த அமைந்துள்ள காணியில் 2001 ஒக்தோபர் 19 வரை உடைத்து அகற்றப்பட்டிருந்த சுண்ணாம்பு கற்களுக்காக அறவிடப்பட வேண்டிய சேவைக் கட்டணம் மற்றும் நிலுவைக் குத்தகை மற்றும் சீ, எல், எச் மற்றும் வலவ வலையங்களின் கருங்கல் அகழ்வுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணத்தின் கூட்டுத்தொகை ரூபா 330.52 மில்லியன் தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இன் 33 பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டிய மீதிகள் என இனங்கண்டிருக்கவில்லை. | நிலுவைக் காணிக் கையாடல் கட்டணம், சுண்ணாம்புக் கற்களுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் மற்றும் நிலுவை குத்தகைக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் அடுத்து நிதிக்கூற்றுக்களில் ‘‘பெற வேண்டிய மீதிகள்’’ என இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பெற வேண்டிய வருமானங்கள் என காணி கையாடல் கட்டணம், கருங்கல் மற்றும் சுண்ணாம்புக் கற்களுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்களை இனங்கண்டு கணக்கீடு செய்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் 48 ஆம் பந்திக்கு இணங்க பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்களாகிய வருவாய், நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட தேறிய சொத்துக்களின் அதிகரித்தல் பெறுமதிக்கு இனங்காணப்பட வேண்டிய போதிலும், அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்தின் மூலம் மகாவலி அதிகார சபையினால் பராமரிக்கப்படுகின்ற அணைக்கட்டுக்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 4,394.97 மில்லியனிற்கான செலவுகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டிருந்த மூலதனச் செலவுகளை அந்த செயற்திட்டத்தின் மூலம் உறுதிப்படுத்திக்கொண்டு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பந்தி 48 இன் பிரகாரம் அடுத்த ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் மூலம் அதிகாரசபையின் அணைக்கட்டுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை இனங்கண்டு மூலதனப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | இலங்கை பொத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 13 இன் பந்தி 09 படி குத்தகை உழைப்பதற்காக வைத்துள்ள ஆதனங்கள், முதலீட்டு ஆதனங்கள் என இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும், வெளி நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள 05 கட்டிடங்களுக்குரிய காணிகளுக்கான பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி முதலீட்டு ஆதனங்கள் என இனங்கண்டிருக்கவில்லை. | முதலீட்டு அலுவல் ஒன்றிற்காக வழங்கப்பட்டுள்ள இலங்கை வங்கி (திகன விலேஜ் கிளை) இற்கு மாத்திரம் காணப்படுவதுடன், அந்த வருமானம் 2025 ஆண்டில் முதலீட்டு ஆதனங்கள் என கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் வாடகை அடிப்படையில் வழங்கப்படுகின்ற கட்டிடங்களுக்குரிய முதலீட்டு ஆதனங்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 13 இன் பந்தி 44 இன் படி முதலீட்டு ஆதனங்கள் நியாயமான பெறுமதியில் மாற்றங்கள் ஊடாக ஏற்படுகின்ற அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் அது ஏற்படுகின்ற காலப் பகுதியில் மிகைக்கு அல்லது பற்றாக்குறைக்கு இனங்காணப்பட வேண்டிய போதிலும், பீ வலையத்தின் நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு ஆதனங்களின் நியாயமான பெறுமதியின் அதிகரிப்பு ரூபா 256.25 மில்லியன் தொகை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்களின் நியாயமான பெறுமதி பதிவு செய்தல் தவறினை 2025 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் முதலீட்டு ஆதனங்களின் நியாயமான பெறுமதி அதிகரித்தல் குறிப்பிட்ட காலப் பகுதியின் மிகைக்கு அல்லது பற்றாக்குறைக்கு இனங்காணப்பட வேண்டியிருந்தமையால், அப்பெறுமதி மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் 61 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நலன்கள் திட்டம் என இனங்கண்டிருந்த ஊழியர் பணிக்கொடை ஏற்பாடு இயற்கணிப்புப் பொறிமுறையை பயன்படுத்தி இனங்காணல் மற்றும் அதனை அளவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவனம் அதற்கு இணங்கியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பணிக்கொடை இயற்கணிப்புப் பொறிமுறையை பயன்படுத்தி இனங்காணல் மற்றும் அளவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 18 இன் பந்தி 13 இன் பிரகாரம் இனவிருத்திச் சொத்துக்களை இனங்காணும் போது சொத்துக்களின் நியாயமான பெறுமதி மற்றும் கிரயம் நம்பிக்கை ரீதியாக அளவை செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறின்றி பீ வலையத்தின் நிதிக்கூற்றுக்களில் இனவிருத்திச் சொத்துகளின் வரத்தக இருப்பு என காட்டப்பட்டுள்ள அரலகங்வில பண்ணையின், மத்திய நாற்று மேடையின் மற்றும் வெளிகந்த நாற்று மேடையில் கன்றுகள் மற்றும் மரங்களின் பெறுமதி பண்ணை முகாமையாளரினால் வழங்கப்பட்டிருந்த பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு ரூபா 10.8 மில்லியன் தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், தெஹியத்தகண்டிய நாற்று மேடையின் கன்றுகள் இருப்பு இனவிருத்திச் சொத்துக்கள் என இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2025.12.31 திகதியில் உள்ளவாறு பௌதீக இருப்புக் குழுவின் மூலம் கணிக்கப்பட்டு பெறுமதி ஏடுகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் இனவிருத்திச் சொத்துக்களை இனங்காணும் போது சொத்தின் நியாயமான பெறுமதி மற்றும் கிரயம் நம்பிக்கைபூர்வமாக அளவீடு செய்வதற்கும் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | வளவ விசேட அதிகாரப் பிரதேசத்திற்குரிய பாரந்தூக்கிப் பொறியொன்று 2014 செப்தம்பர் 07 திகதி விபத்துக்குள்ளாகியிருந்ததுடன், அதனை இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 36 இன் படி சேதம் விளைவித்தல் நியமத்தின் படி நட்டத்தை கணிக்கப்பட்டு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமல், 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதன் கிரயம் ரூபா 45 மில்லியன் தொகை மற்றும் தேறிய ஏட்டுப் பெறுமதி ரூபா 24.75 மில்லியன் என காட்டப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 36 இன் படி சேதம் விளைவித்தல் நட்டம் கணிக்கப்பட்டு 2025 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி சேதம் விளைவித்தல் நட்டம் கணிக்கப்பட்டு அறிக்கையிடல் வேண்டும். |

### 1.5.1.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மகாவலி சீ வலயத்தின் 2016 – 2018 காலப் பகுதிக்குரிய 401 மணல் துறையாளர்களிடம் பெற வேண்டிய நிலுவை காணி பயன்படுத்தல் கட்டணம் ரூபா 278.69 மில்லியன் தொகை, 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்திலிருந்து சீ வலையத்திற்கு அறவிடப்பட வேண்டிய காணி பயன்படுத்தல் கட்டணம் ரூபா 19.76 மில்லியன் தொகை மற்றும் வலவ வலையத்தின் தனியார் கம்பனியொன்றிலிருந்து மண் | சீ வலையத்தின் மணல் துறையாளர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவைத் தொகையும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் மூலம் வலையத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 19,759,220 இற்கான காணி பயன்படுத்தல் கட்டணமும், 2025.12.31 திகதியில் உள்ளவாறு | பெற வேண்டிய காணிப் பயன்படுத்தல் கட்டண வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு மற்றும் நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெட்டுவதற்கான நிலுவை காணி பயன்படுத்தல் கட்டணம் ரூபா 10.65 மில்லியன் தொகை என மொத்தம் ரூபா 309.10 மில்லியன் தொகை பெற வேண்டிய மீதிகள் என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.<br><br>வளவ வலையத்தின் கம்பனியொன்றிலிருந்து அறவிடப்பட வேண்டிக் காண்பட்ட ரூபா 10,640,720 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்கு பொது ஆதன சட்டத்தின் கீழ் முறைப்பாடுகள் தாக்கல் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.<br><br>கணக்கீடு செய்யப்பட்டிருக்காத நிலுவைக் காணி பயன்படுத்தல் கட்டணங்கள் 2025 ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஆ) | பாரிய மகாவலித் திட்டத்தின் கீழ் இனங்கண்டிருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 13,853 மில்லியன் தொகைக்கான உமா ஓயா பல்கரும அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாண வேலைகள் 2023 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டு மின் உற்பத்தி அலுவல்கள் 2024 மார்ச் 31 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழான நிர்மாண வேலைகளை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஊமா ஓயா பல்கரும அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அதிகாரசபைக்கு ஒப்படைக்க வேண்டிய பிரதான அனைக்கட்டுக்கள் மற்றும் நீர்த் தேக்கங்கள் சார்ந்த நிலையான சொத்துக்களின் சில பகுதிகள் முழுமையாக முறைப் பிரகாரம் ஒப்படைத்து முடிவடைந்திருக்கவில்லை.<br>குறிப்பிட்ட சொத்துக்களை முறைப் பிரகாரம் ஒப்படைத்து பூர்த்தி செய்த பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | விரைவாக அந்த சொத்துக்களை முறைப் பிரகாரம் ஒப்புக்கொள்வதற்கும், கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | அதிகாரசபைக்குச் சொந்தமான 3001 நிதியக் கணக்கின் மீதியினுள் பல வருட காலமாக காணப்பட்டு வருகின்ற கூட்டுத்தொகை ரூபா 560.76 மில்லியன் தொகைக்கான வரவு மீதிகள் மற்றும் ரூபா 509.1 மில்லியனிற்கான செலவு மீதிகளை இனங்கண்டு உரிய கணக்கீட்டு சீராக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மீதிகள் தொடர்பாக விடயங்களை கண்டறிந்து உறுதிப்படுத்தி, அடுத்த ஆண்டு கணக்குகளில் சீராக்கல் செய்வதற்கு குறித்துக்கொண்டேன். | இந்த வரவு மற்றும் செலவுப் பதிவு மீதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அதிகாரசபையினால் 1984 – 1989 ஆண்டுகளின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 64.32 மில்லியனிற்கான 02 காணித் துண்டுகளும், கொத்மலை கனிஷ்ட முகாமில் 54 வரிசை வீடுகளும், அதிகாரசபையின் வலைய அலுவலகம், பிரிவுகள், உத்தியோகபூர்வ வாசஸ்தளம் மற்றும் சுற்றுலா விடுதிகள் ஆகியவை அமைந்துள்ள காணிகளை இனங்கண்டு அவற்றின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | நில அளவை நடவடிக்கைகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டிற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட பின்னர் குறிப்பிட்ட கருமத்தை விரைவுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | அதிகாரசபைக்கு அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கல் திட்டமிடும் செயற்திட்டங்களில் இருந்து மற்றும் மொரககந்த செயற்திட்டத்திலிருந்து மற்றும் தட்பவெப்ப பக்கவிளைவினை குறைவடையச் செய்தல் செயற்திட்டங்களிலிருந்து முறையே ரூபா 82 மில்லியனிற்கான, ரூபா 69.64 மில்லியனிற்காக மற்றும் ரூபா 247 மில்லியனிற்கான சொத்துக்ள் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன், தபுத்தேகம இயந்திர வேலைத் தளத்தின் பொறுப்பில் காணப்படுகின்ற மொரககந்த செயற்திட்டத்திலிருந்து கிடைத்த 16 வாகனங்களையும் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | மேற்கூறிய செயற்திட்டத்தின் மூலம் அவ்வாறு சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ளது என கூறப்பட்டுள்ள போதிலும், முறையான செய்முறையொன்றின் மூலம் கிடைக்கப்பட்டுள்ள பண்டங்களுக்காக கொள்வனவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள அனைத்துச் சொத்துக்களும் அதிகாரசபையின் கணக்குகளுக்கு சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வாகனங்கள் அதிகாரசபைக்கு உரித்தாக்கித் தரும்படி வரிசை அமைச்சின் செயலாளரிடம் வேண்டப்பட்டதுடன், அங்கீகாரம் கிடைத்த பின்னர் அந்த 16 வாகனங்களையும் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | இந்த செயற்திட்டங்களின் மூலம் கிடைத்துள்ள அனைத்துச் சொத்துக்களும் உரிய முறையில் கணக்கீடு செய்து சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஊ) | கீழ் கொத்மலை ஓயா சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 2021 முதல் 2024 வரையான ஆண்டுகள் தொடர்பாக பெற வேண்டிய வருமானங்களை கணித்து 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2025 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இந்த நீர் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து பெற வேண்டிய வருமானத்தை கணித்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | அதிகாரசபையினால் குத்தகை அறவீடு செய்யக்கூடிய 18,766 ஹெக்டயர் தொகை காணிகள் 2023 திசெம்பர் 31 திகதி அளவில் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி | அரச பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொள்வதற்காக காணிப் பகுதிகள் நில அளவைத் திணைக்களத்தினால் நில | கணக்கீடு செய்யப்படாத அதிகாரசபைக்கு சொந்தமான வெளித்தரப்பினருக்கு |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 2,810.49 மில்லியனிற்கான 6114.21 ஹெக்டயர் காணி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அளவை செய்யப்பட்டு வரைபுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன், தற்போது நியதிச் சட்ட உரித்துறுதிகள் தயாரிப்பதில் தாமதமொன்று காணப்படுவதுடன், காணிகள் பெறுவோரின் அனுபவித்தலை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் பெற்றுக்கொள்வதில் தாமதமடைதல், பெறுமதி மதிப்பீட்டுச் சேவைக்கான கட்டணம் செலுத்துவதற்கு காணிகளை பெறுவோர் விருப்பம் காட்டாமை, காணிகள் பெறுவோருக்கு சட்டரீதியான ஆவணங்கள் வழங்குவதில் தாமதங்கள், வழங்கப்பட்ட காணிப் பகுதிகளை அபிவிருத்தி செய்யாமை, வழங்கப்பட்டிருந்த கருமத்திற்காக காணிப் பகுதிகள் பயன்படுத்தப்படாமை ஆகிய விடயங்கள் காணிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்த குத்தகைத் தொகை குறைவடைவதற்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | வழங்கப்பட்டுள்ள காணிகளை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன், அதற்காக அறவீடு செய்யப்பட வேண்டிய குத்தகைத் தொகையும் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | சூரியப் பெனல், இன்வேடர் மற்றும் முறைமையின் உற்பத்திக் கொள்திறனுக்காக உத்தரவாத காலம் முறையே 20 வருடங்கள், 07 வருடங்கள் மற்றும் 25 வருடங்களாக காணப்பட்ட போதிலும், அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் பீ வலையத்தில் 30 கிலோவொட் சூரிய சக்தி முறைமையொன்று 2021 ஆண்டின் போது ரூபா 5 மில்லியன் தொகை என மின் பிறப்பாக்கியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு 15 சதவீத பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆண்டின் போது இந்த சூரிய பெனல் முறைமையை இயந்திர உபகரணங்கள் - பொது (Plant Machinery and Equipment – General) இந்தத் தொகுதியின் கீழ் காட்டி பெறுமானத் தேய்வு கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென அறிவிக்கின்றேன். | கணக்கீட்டு வழு சரி செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | ஏனைய வலையங்களின் வாகனங்களை திருத்த வேலை மேற்கொள்தல் தொடர்பாக இயந்திர வேலைத் தளத்திற்கு பெற வேண்டிய ரூபா 1.85 மில்லியன் தொகை எச் வலையத்தின் நிதிக்கூற்றுக்களில் மூலதனத் தன்மையிலான நடைபெறு வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2025 ஆண்டு நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்வேன். | கணக்கீட்டு வழு சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | இலங்கை மகாவலி அதிகாரசபையின் பங்கு உரிமையின் கீழ் காணப்பட்ட மகாவலி வென்சர் கெபிடல் தனியார் கம்பனி 2024 நவம்பர் 25 திகதி கணக்குகளை தீர்த்து ஒழிக்கும் போது அந்த கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் அடங்கியிருந்த ரூபா 18.05 மில்லியன் தொகைக்கான காசு மீதிகள் மகாவலி அதிகாரசபையின் கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், பௌதீக ரீதியாக காணப்பட்டவில்லை என ஒழிப்பாளர்களினால் அறிவிக்கப்பட்டிருந்த மற்றும் கம்பனியை ஒழிக்கும் போது தற்காலிக சொத்துக்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 3.32 மில்லியனிற்கான 08 சொத்து மீதிகளுக்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு உரிய நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கம்பனியை ஒழிக்கும் போது பௌதீக ரீதியாக காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டு ஒழிப்பாளர்களினால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ள ரூபா 3,322,745 இற்கான மீதிகள் தொடர்பான விபரங்கள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அதன் தீர்மானத்தின் படி 2025 நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது பௌதீக ரீதியாக காணப்படாத மீதிகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், இது தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்த வேண்டும். |
| (ஓ) | கட்டிடங்களுக்கு மேலதிகமாக தெமடகொடவில் அமைந்துள்ள காணியின் பெறுமதியாகிய ரூபா 296 மில்லியன் தொகைக்காகவும், தலைமை அலுவலக வலாகத்தில் அமைந்துள்ள 493 மற்றும் 1/493 இலக்கம் கொண்ட காணிகளின் பெறுமதி ரூபா 1,151 மில்லியன் தொகைக்காக 5 சதவீதம் எனப்படும் ரூபா 72.35 மில்லியன் தொகை பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தமையால் பெறுமானத் தேய்வுச் செலவு அந்தப் பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | அதிகாரசபையின் தலைமை அலுவலக நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அலுவலகம் அல்லாத கட்டிடங்கள் மற்றும் காணிகளின் பெறுமதி ஒரே நிலையான சொத்துத் தொகுதியின் கீழ் பேணிச் செல்வதனால் (BD என) அந்தக் கட்டிடங்கள் மற்றும் காணிக்ள ஆகிய இரண்டு பகுதிகளும் 5% வீதாசாரத்தில் தவறுதலாக 2024 ஆண்டில் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீட்டு வழுக்கள் சரி செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | 1986 ஆண்டு முதல் மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்ட தலைமை அலுவலக வளாகத்தின் வீதவரி இலக்கம் 500, 1/500 கொண்ட 0.264 ஹெக்டயர்களுக்கான காணியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | துண்டு இலக்கம் 01 இல் எல்லைகள் பௌதீக ரீதியாக மாற்றமடைந்திருப்பதனால் மற்றும் துண்டு இலக்கம் 02 இலக்கம் (1/500) உரிமை இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு காணப்படாமையால் அரச பெறுமதி மதிப்பீட்டாளரால் கட்டிடங்களின் பெறுமதிகளை | இந்தக் காணியின் பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மாத்திரம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. அதன் காரணமாக காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்ய முடியாமல் போனதுடன், எல்லைகளை மீண்டும் சரி செய்து பெறுமதி மதிப்பீடு செய்து 2025 நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (க) | இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் (நிறுவன அபிவிருத்தி) ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1.5 மில்லியனிற்கான நிலையான சொத்துக்கள் மற்றும் 08 பொருட் பதிவேட்டுப் பண்டங்கள் அதிகாரசபைக்கு திருப்பி ஒப்படைத்திருக்காமையால், 25 சதவீதம் அதாவது ரூபா 376,129 தொகை நிறுவனம்சார் கட்டணத்துடன், ரூபா 1.88 மில்லியனிற்கான அவரின் பணிக்கொடை கொடுப்பனவிலிருந்து கழிப்பதற்கு 2024 ஆண்டில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் அதிகாரசபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை மீளாய்வாண்டில் சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இந்தச் சொத்துக்களின் பெறுமதி 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் படி முன்னைய ஆண்டின் சீராக்கல் என 2025 நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | அதிகாரசபைக்கு ஏற்பட்டுள்ள இலாபத்தை கணக்கீடு செய்து சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட வேண்டும். |

**1.5.1.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எப் வலையத்தின் நிதிக்கூற்றுக்களின் படி இலங்கை மகாவலி அதிகாரசபையினால் 50 சதவீத பங்களிப்பின் கீழ் அல்லது விவசாய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக விவசாயிகளிலிருந்து சேகரிக்கப்பட்டு 2021 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை தடுத்து வைக்கப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு செலுத்தப்படாமல் வைக்கப்பட்டுள்ள பணம் ரூபா 19.16 மில்லியன் தொகையாக காணப்பட்ட போதிலும், விவசாய பிரிவிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் படி அந்தத் தொகை ரூபா 2.17 மில்லியனாக காணப்பட்டமையால், | விவசாய திணைக்களத்திற்கு விதைகளுக்காக செலுத்துவதற்காக 50% விவசாயிகளின் பங்களிப்பு மீது தடுத்து வைக்கப்பட்டுள்ள ரூபா 2,883,449 தொகை பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பரிசோதனை மேற்கொண்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>குறிப்பிட்ட செலவிற்கு | இந்த வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து தேவையான சரி செய்தல்கள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 16.99 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சீராக்கல் செய்ய வேண்டிய ரூபா 4,586,189 தொகை தடுத்து வைத்தல் என பதிவு செய்யப்பட்டுள்ளது. 2025 ஆண்டில் குறிப்பிட்ட செலவுகள் கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்படும்.<br><br>ரூபா 11,689,134 தொகை, 2024 ஆண்டிற்குரிய 50% விவசாய பங்களிப்பின் மீது அறவீடு செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தொகையாக காணப்படுவதுடன், பற்றுச்சீட்டுக்கள் பரிசோதனை செய்த பின்னர் 2025 ஆண்டில் ரூபா 11,689,134 தொகைக்கான கொடுப்பனவு அலுவல்கள் மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | தனியார் கம்பனியொன்றுக்கு செலுத்தப்பட வேண்டிய மீதி என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதி ரூபா 2.65 மில்லியன் தொகை எனினும், குறிப்பிட்ட கம்பனி தொடர்பாக காணிப் பிரிவில் பேணப்பட்டு வருகின்ற கோப்பின் படி அந்த மீதி ரூபா 3.52 மில்லியனாக காணப்பட்டமையால், ரூபா 0.87 மில்லியனிற்காக வித்தியாசமொன்று காணப்பட்டது. | தனியார் கம்பனிக்கு மேலும் செலுத்த வேண்டிய மீதியென காணப்படுகின்ற ரூபா 2,652,153 தொகையாகும்.<br><br>அதேபோல், உப ஒப்பந்தக்காரர் ஒருவர் பிற்காலத்தில் ரூபா 3,516,598.39 இற்கான பில்பத்திரமொன்று சமர்ப்பித்திருந்ததுடன், அந்த ஒப்பந்தக்காரருடன் நிறுவனம் உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்காமையால், இந்தக் கொடுக்கல் தொடர்பாக சிக்கல் தன்மையொன்று தொடர்ந்தும் நிலவுகின்றது. காணிப் பிரிவின் கோப்பின் படி குறிப்பிடப்பட்டுள்ளது உப ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய தொகையாகும். | - மேற்படி - |

#### 1.5.1.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆதிகாரசபையினால் வ/ப மகாவலி கால்நடை வர்த்தகக் கம்பனியில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 10 மில்லியனிற்கான முதலீட்டிற்காக பங்குச் சான்றுகள் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானமும், கலம்குட்டிய பண்ணை தொடர்பாக பெற வேண்டிய ரூபா 14.64 மில்லியனிற்கான குத்தகை உடன்படிக்கையும், பீ வலையத்தில் பெற வேண்டிய நீர் பில்பத்திர வருமானம், பெற வேண்டிய வைப்பு வட்டி மற்றும் களஞ்சிய அறவீடுகளின் கூட்டுத்தொகை ரூபா 7.3 மில்லியன் தொகைக்காக அட்டவணைகளும், மடாடுகம இயந்திர வேலைத்தளத்தில் பெறவேண்டிய மீதியும், செலுத்த வேண்டி மீதி மற்றும் செலுத்த வேண்டிய வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதி என கூட்டுத்தொகை ரூபா 14.82 மில்லியனிற்கான உளமையை உறுதி செய்வதற்கான எழுத்துமூல சான்றுகள், பிரதான அணைக்கட்டுகள் மற்றும் நீர்த் தேக்கங்களின் செயற்பாட்டுப் பிரிவின் நிதிக்கூற்றுக்களின் பெற வேண்டிய ரூபா 1.24 மில்லியனிற்கான மீதிகளின் உளமையை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல சான்றுகள், ஈ வலையத்தின் நிலுவை குத்தகை ரூபா 243.21 மில்லியனிற்கான குத்தகை ஆவணங்கள் ஆகிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் கம்பனி தற்போது கால்நடை பண்ணை விலங்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் மேற்பார்வையின் கீழ் காணப்படும் கம்பனியொன்றாக செயற்படுத்தப்படுகின்றது.<br><br>இந்தச் சிக்கலை தீர்த்துக்கொள்வதற்காக இரு தரப்பினர்களிடமும் காணப்படுகின்ற கடமை ஆவணங்கள் பரிமாறப்பட்டதுடன், அவற்றை ஆய்வு செய்து இந்த சிக்கல்களை தீர்த்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.<br><br>எஞ்சிய மீதிகள் தொடர்பாக எதிர் காலத்தில் கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.<br><br>ஈ வலையத்தின் நிலுவை குத்தகை மீதி கணிக்கும் போது அலுவலக வழுவொன்றின் காரணமாக விக்டோரியா பிரிவின் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதுடன், தற்போது அதனை சரி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இந்த மீதிகளின் உளமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டும். |

### 1.5.2 வ/ப மகாவலி லயிவ்ஸ்டொக் என்ட் எக்ரோ என்டபிரைசஸ் (பிரைவட்) லிமிட்டட்

#### 1.5.2.1 சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராந்துருகோட்டே பண்ணையில் 1,113 ஏக்கர் 0 ரூட் 37.76 பர்சஸ் இற்கான காணியின் பெறுமதி மற்றும் தம்மின்ன பண்ணையின் 100 ஏக்கர் காணி கம்பனியினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும், சிறு மற்றும் மத்திய அளவிலான | கிராந்துருகோட்டே பண்ணை மற்றும் தம்மின்ன பண்ணையின் காணிகளை பெறுமதி மதிப்பீடு செய்து கம்பனிக்கு இலங்கை மகாவலி அதிகாரசபையினால் | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காணிகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தொழில் முயற்சியாளர்களுக்கான கணக்கீட்டு நியமத்தின் பந்தி 17.4 இன் படி இந்தக் காணிகளின் பெறுமதி கம்பனியினால் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. கம்பனிக்கு அந்தக் காணிகள் பயன்படுத்துவதற்காக மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிளுக்கான கணக்கீட்டு நியமம் 10.21 இன் படி முன்னைய ஆண்டிற்கான தவறுகள் ஒப்பீட்டு ரீதியாக முன்னைய ஆண்டின் எண்ணிக்கைகளுக்காக சீராக்கல் மேற்கொண்டு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கம்பனி அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | பதிலளித்திருக்கவில்லை. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கான தவறுகள் ஒப்பீட்டு ரீதியாக சீராக்கல் மேற்கொண்டு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல் என ரூபா 13,454,122 தொகை வருவாய் ஒதுக்கத்திலிருந்து கழித்து ரூபா 7,402,549 தொகை கூட்டியிருந்த போதிலும், சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமம் 10.23 இன் படி அதற்கான வெளிப்படுத்தல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | 2025 ஆண்டில் சமர்ப்பிக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமம் 28.18 இன் படி பணிக் கொடை கழிக்கும் போது இயற்கணிய அடிப்படையாக கொண்டு பணிக்கொடை பொறுப்பு கணிக்கப்பட்டு இலாபம் அல்லது நட்டம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், கம்பனி அதற்கு இணங்கியிருக்கவில்லை. | 2025 ஆண்டின் போது கணக்கீட்டு நியமம் 28.18 இற்கு இணங்க பணிக்கொடைத் தொகை கணக்கீடு செய்யப்படும் என அறிவிக்கின்றேன். | நியமத்திற்கு இணங்க இயற்கணிய முறை கடைபிடிக்கப்பட்டு பணிக்கொடை பொறுப்புக்கள் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | வாணிப மரங்கள் என விற்பனை செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்டு ரூபா 9,446,800 தொகைக்கான தம்மின்ன பண்ணையின் 195 தேக்கு மரங்கள் மற்றும் கிராந்துருகோட்டே பண்ணையில் 211 தேக்கு மரங்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 41 இன் 10 ஆம் பந்தியின் படி பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த தேக்கு மரங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக அரச மரக் கூட்டுத்தாபனத்திலிருந்து இடப் பெறுமதியொன்று பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது 2025 பெப்ரவரி மாதத்திலேயாகும். அதன் காரணமாக அந்த மரங்களை பெறுமதி மதிப்பீடு செய்து 2025 ஆண்டில் தேவையான கணக்குகளுக்கு உட்படுத்தப்படும் என அறிவிக்கின்றேன். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இந்த மரங்கள் பெறுமதி மதிப்பீடு செய்து அந்தப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

#### 1.5.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவுகளை சரியாக இனங்காண்பதற்கு பதிலாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுக்கு சீராக்கல் மேற்கொள்ளல் கம்பனியினால் தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தமையால், 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட முறையே ரூபா 1,325,555 தொகையிற்கான நட்டம், ரூபா 167,815 இற்கான இலாபம் மற்றும் ரூபா 295,352 இற்கான நட்டத்திற்காக அடுத்த ஆண்டின் போது முறையே ரூபா 3,376,919 தொகை, ரூபா 2,089,263 தொகை மற்றும் ரூபா 20,856,669 தொகை முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது முறையே ரூபா 1,695,098 இற்கான நட்டமொன்று, ரூபா 627,268 இற்கான இலாபமொன்று மற்றும் ரூபா 6,346,924 இற்கான நட்டமொன்று வரை நிதி விளைவுகள் 28 சதவீதம் முதல் 2048 சதவீதம் வரை வித்தியாசமான பெறுமதியொன்றினை கொண்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆண்டிற்குரிய வருமானங்கள் மற்றும் செலவுகளை சரியாக இனங்காண்பதற்காக பொறுப்புடன் கட்டுப்பாட்டு முறைமையொன்று நிறுவப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனிக்கு சொந்தமாக காணப்பட்ட தம்புத்தேகமவில் அமைந்துள்ள நிராவிய பண்ணை, கந்தளாய் பண்ணை, பொலன்னறுவையில் அமைந்துள்ள சித்தபுர பண்ணை மற்றும் வெலிகந்தவில் அமைந்துள்ள முதுவெல்ல பண்ணை 2005 – 2010 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் முறையான ஆவணங்கள் பரிமாரப்படாமல் மகாவலி அதிகாரசபைக்கு | இந்த சொத்துக்கள் 2025 ஆண்டின் போது கம்பனியினால் கணிப்பீடு மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். | கம்பனிக்கு சொந்தமான சொத்துக்களை மாத்திரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சாட்டப்பட்டிருந்தது. அந்தப் பண்ணைகளுக்கு சொந்தமாக கூட்டுப்பெறுமதி ரூபா 22,335,573 தொகைக்கான நிலையான சொத்துக்கள் கம்பனியினால் பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட போதிலும், கம்பனியின் கணக்குகளில் உட்படுத்தப்பட்டிருந்தது. மேலும், அந்தச் சொத்துக்கள் இலங்கை மகாவலி அதிகாரசபை அல்லது கம்பனியினால் பௌதீக ரீதியாக கணிப்பீடு செய்திருக்கவில்லை. | | |
| (இ) | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 652,809 தொகைக்கான மிகை விதிப்பு மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 402,513 தொகைக்கான மிகை விதிப்பு என்பன மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆண்டில் மிகை விதிப்புக்களை கணக்கீடு செய்யப்படும் எனவும் மற்றும் நிலுவைத் தொகையை செலுத்தி முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | அனைத்துப் பொறுப்புக்களையும் இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆனால் செலவொன்றென அந்த ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படாத ரூபா 441,111 தொகைக்கான வாகன திருத்தச் செலவு மீளாய்வாண்டிலும் முன்னைய காலத்திற்கான கொடுப்பனவு என நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | 2025 ஆண்டில் இலாப நட்டக் கணக்கில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இந்த செலவு 2022 ஆண்டிற்குரிய செலவொன்றாக காணப்படுவதனால் அதனை முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் என இனங்கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அப்புறப்படுத்தியிருக்காத ரூபா 2,285,000 இற்கான 5 வாகனங்கள் மற்றும் 2 டிரக்டர் டேலர்கள் நடைமுறை அல்லாத சொத்துக்கள் மீதியிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | இந்த வாகனம் 2025 ஆண்டின் போது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | தொடர்ந்தும் கம்பனியினால் பயன்படுத்தப்படுகின்ற 05 வாகனங்கள் மற்றும் 02 டிரக்டர் டேலர்கள் நடைமுறை அல்லாத சொத்துக்கள் மீதி என மீண்டும் உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | நீண்ட காலம் முதல் செலுத்த வேண்டியவை என காட்டப்பட்டிருந்த செலுத்தப்படாத நிலுவைச் சம்பளம் ரூபா 3,992,144 தொகை மற்றும் அதற்குரிய சேமலாப பங்களிப்புத் தொகை ரூபா 1,144,999 மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்புத் தொகை ரூபா 166,208 | 2025 ஆண்டின் போது தவணைகளாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம வெளிப்படுத்த வேண்டும். |

தொகை தொடர்பாக தொழிற் திணைக்களத்தினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கான போதியளவு வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**1.5.2.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | விடயம் | தொகை ரூபா | கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பொது ஒதுக்கம் | | | | |
| (i) | மகாவலி பொருளாதார ஏஜன்ஸி | 388,575,802 | பெறுமதியை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் | இந்த மீதிகள் இலங்கை மகாவலி அதிகாரசபையின் பண்ணை விலங்குகள் அபிவிருத்தி பிரிவு என காணப்பட்ட காலப் பகுதியில் பிரிவுக்கு வழங்கப்பட்ட பணமாகும். இது தொடர்பாக கம்பனியில் எதுவித பதிவுகளும் காணப்படவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | கொத்மலை பால் அபிவிருத்தி நிதியம் | 2,900,000 | - மேற்படி - | | |
| (iii) | ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு மூலதன மானியம் | 3,583,706 | கணக்கீடு செய்வதற்குரிய ஆவணங்கள். | | |
| (iv) | வெளிநாட்டு உதவி | 5,729,782 | - மேற்படி - | | |
| (ஆ) | மூலதன ஒதுக்கம் | 14,159,541 | - மேற்படி - | | |

**1.5.3 வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்கள் முகாமைத்துவ தனியார் கம்பனி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி ஒழிக்கப்பட்டு வருவதுடன், அந்தக் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் ஒன்றிணைக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழிக்கப்பட்டு வருகின்றது. | ஒழிக்கப்பட்டு வருகின்ற கம்பனியின் நிதிக்கூற்றுக்களை ஒன்றிணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் | அதிகாரசபை வருமான வரிக்காக பதிவு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் வரி அடிப்படையில் இலாபம் கணிக்கப்பட்டு வருமான | அதிகாரசபை வருமான வரிக்காக பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகுதி II பிரிவு 102 | | வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி கூட்டிய வரிச் சட்டம் - அத்தியாயம் II | அதிகாரசபை காணிகளை குத்தகைக்கு கொடுத்தல், கனிய வள பிரித்தெடுப்பதற்கான காணி பயன்படுத்தல் கட்டணம் அறவீடு செய்தல், சுற்றுலா விடுதிகள் வாடகைக்கு கொடுத்தல் ஆகிய பெறுமதி கூட்டிய வரி அறவீடு செய்யப்படும் தொழிற்பாடுகளில் ஈடுபட்டிருந்த போதிலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்து பெறுமதி கூட்டிய வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி கூட்டிய வரி சட்டத்தின் கீழ் வரி செலுத்துவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். | அதிகாரசபை பெறுமதி கூட்டிய வரிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி. 104 | (i) தெஹியத்தகண்டிய வதிவிட திட்ட முகாமைத்துவ அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த கப் வண்டியொன்று 2019 திசெம்பர் 22 திகதி விபத்துக்குள்ளாகியிருந்தது. சேதம் ஏற்பட்டிருந்த நாள் முதல் 03 மாதங்களுக்குள் சேதம் தொடர்பான முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், விபத்து தொடர்பாக முழுமையான அறிக்கை விபத்து ஏற்பட்டு 03 வருடங்களும் 05 மாதங்களுக்கு பின்னர் வழங்கப்பட்டிருந்தது. வாகனம் 2023 மார்ச் 23 திகதி ரூபா 9.99 மில்லியன் மதிப்பீட்டொன்றின் படி | இந்த விபத்து தொடர்பாக அதிகாரசபைக்கு ஏற்பட்டுள்ள நிதி நட்டம் ரூபா 2,724,532.71 இற்கான தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து ஆலோசனை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டவுடன், அங்கு இந்த சம்பவம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(i) இன் படி நடவடிக்கை எடுத்தல் தவிர வேறேதும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என பிரதிப் பணிப்பாளர் (சட்டம்) அவருக்கு வாய்மொழி | விபத்துக்குள்ளாகிய வாகனத்தை விரைவாக திருத்த வேலை மேற்கொள்வதற்கும், அதிகாரசபைக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தனியார் நிறுவனம் ஒன்றின் அனுராதபுர கிளைக்கு திருத்த வேலை மேற்கொள்வதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. காப்புறுதி நட்டஈடு என ரூபா 3.7 மில்லியன் தொகை மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2025 மே 20 திகதி அளவிலும் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், காப்புறுதி நட்டஈட்டின் மூலம் அணவல் செய்யப்படாத திருத்த வேலைச் செலவுகள் ரூபா 6.29 மில்லியன் தொகை உரிய பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 104(i) இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேபோல், 2025.05.16 திகதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி அமைச்சின் உத்தியோத்தர்கள் மூவர் அடங்கிய குழுவின் மூலம் மீண்டும் இது தொடர்பாக விசாரணை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| | (ii) வலவ விசேட அதிகாரப் பிரதேசத்திற்கு சொந்தமான பாரந்தூக்கிப் பொறியொன்று 2014 செப்தம்பர் 07 திகதி மாலிகாவில புனித தள கூரை நிர்மாணிப்பதற்காக ஈடுபடுத்தியிருந்த சந்தர்ப்பத்தில் விபத்துக்குள்ளாகி இருந்த போதிலும், இது தொடர்பாக விசாரணை அறிக்கையொன்று பெற்றுக்கொண்டிருக்காதது டன், விபத்து ஏற்பட்டு 11 வருடங்கள் கடந்திருந்த போதிலும், இந்த சொத்துக்களை திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக்கொண்டேன். | இந்த இயந்திரத்தை திருத்த வேலை மேற்கொள்ளல் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்கண்டு அதற்காக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், இயந்திரத்தை தொடர்ந்தும் தாமதப்படுத்தாமல் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்த வேண்டும். |
| (ii) நி.பி. 507 | வருடாந்தக் கணக்குகளில் உட்படுத்துவதற்காக | தற்போது குறிப்பிட்ட இருப்பு மெய்மையாதல் | நிதிப் பிரமாணங்களுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்படுகின்ற இருப்புக்களை பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்ய வேண்டிய போதிலும், எச், எல் மற்றும் வன சுற்றாடல் பிரிவு தவிர மீதியான வலையங்களில் இருப்பு மெய்மையாய்தல் மேற்கொண்டிருக்கவில்லை. | அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை கிடைத்திருந்தமையால் இனங்காணப்பட்ட மேலும் மேற்கொள்ள வேண்டிய சீராக்கல்கள் 2025 ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணங்க திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அனைத்துப் பிரிவுகளில் காணப்படுகின்ற இருப்புக்களை பௌதீக ரீதியாக மெய்மையாய்தல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட 1992 இன் நிதிப் பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளை திருத்தும் அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| (i) | நி.பி. 371(2)(ஆ) | திறைச்சேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி கந்தக்காடு மற்றும் கிராந்துருக்கோட்டை மின்வேலி நிர்மாணிப்பதற்காக ஆய்வுகள் மற்றும் விசேட செயற்திட்ட பணிப்பாளருக்கு 2021 ஆண்டின் போது வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 17.24 மில்லியனிற்கான முற்பணம் 2025 மே 20 திகதி அளவிலும், தீர்த்திருக்காததுடன், குறிப்பிட்ட கருமமும் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கணியப் பட்டியல் தொழில்நுட்பப் பிரிவின் உத்தியோகத்தரின் சான்றிதழின் படி சமர்ப்பிக்கப்படாமை முற்பணம் தீர்ப்பதற்கு சிக்கலொன்றாக காணப்பட்டதுடன், இந்த யானை வேலிகள் நிர்மாணித்தல் தொடர்பாக மேற்பார்வை அலுவல்கள் மேற்கொண்ட இயந்திரப் பொறியியலாளர்களிடம் அது தொடர்பாக எழுத்துமூல வேண்டுதலொன்று மேற்கொண்ட போதிலும், அது தொடர்பாக இதுவரை பதிலொன்று கிடைத்திருக்கவில்லை. அது தொடர்பாக மீண்டும் நினைவூட்டல் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | திறைசேரி அங்கீகாரம் இன்றி முற்பண வரையறையை மிகைத்து செலுத்தப்பட்டிருந்த தொகை தொடர்பாக கொடுப்பனவுக்குரிய உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும். அது தொடர்பாக விசாரணையொன்று மேற்கொண்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன், அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பிட்ட விடயங்களையும் உரிய முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நி.பி. 876(2)(அ) | தற்போது செயற்படு நிதியங்கள் தேசிய தேவைப்பாடு ஒன்றென காணப்படின் மற்றும் அந்த நிதியம் சட்டமொன்றின் மூலம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்காவிடின் அந்த நிதியத்திற்காக இந்த சுற்றிக்கை வெளியிடப்பட்டு ஒரு வருடத்திற்குள் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 1991 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மகாவலி மன்ற நிதியத்திற்காக குறிப்பிட்ட அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது 1991.02.25 திகதியாகும். அவற்றின் ஆரம்பம் தகவல் கோப்புக்களில் காணப்படாமையால் இதற்கான பாராளுமன்ற அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள் ளதா என பரிசோதனை மேற்கொள்ள முடியாதுள்ளது. எவ்வாறாயினும், இந்த நிதியத்தில் காணப்படும் பணம் தொடர்பாக மீண்டும் பாராளுமன்றத்தில் அங்கீகாரம் ஒன்று பெற்றுக்கொண்டு இந்த அலுவல்களை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன. | மகாவலி மன்ற நிதியத்திற்காக நிதிப் பிரமாணங்களின் படி விரைவாக பாராளுமன்ற அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படாத உத்தியோகத்தர்களுக் கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நி.பி. 877(2)(ஈ) | கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் ஒவ்வொரு நிதியம் தொடர்பாக சான்றுபடுத்தப்பட்ட நிதிக்கூற்றொன்றுடன் செயலாற்றல் அறிக்கையொன்று அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மகாவலி மன்ற நிதியம் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 2026 ஆண்டு முதல் இந்த தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நிதியத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றுகை அறிக்கை குறிப்பிட்ட தரப்பினர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2021 நவம்பர் 16 திகதிய PED-01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் நிறுவப்பட்டிருந்த செயற்பாட்டுக் கைநூல் | | | |

| | | | |
|---|---|---|---|
| (i) பந்தி 3.5 | அமைச்சரவை அங்கீகாரம் இன்றி வெளி நிறுவனங்களுக்கு 2020 ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் விடுவிக்கப்பட்டிருந்த மகாவலிப் பாதுகாப்புச் சேனையின் 31 பேர் விடுவிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த சம்பளங்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை மற்றும் மேலதிக நேர வேலை மற்றும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவு முறையே ரூபா 21.17 மில்லியன் தொகை, ரூபா 5.35 மில்லியன் தொகை மற்றும் ரூபா 473,817 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணத்தை திரும்ப அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2020 முதல் 2023 திசெம்பர் 31 வரையான காலப் பகுதி வரை வெளி நிறுவனங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த மகாவலி பாதுகாப்பு சேனையின் அனைத்து பதவியினர்களுக்கும் அக் காலப் பகுதியில் செலுத்தப்பட்ட சம்பளத்தினை மீளளிப்பு செய்வதற்கு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அடிக்கடி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. | அமைச்சரவை அங்கீகாரம் இன்றி ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த ஊழியர்களுக்கு செலுத்தியிருந்த ஊதியங்கள் திருப்பி அறவீடு செய்வதற்கு வேண்டியதுடன், அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்ட இந்த விடுவிப்புக்குரிய உத்தியோகத்தர்களும் பொறுப்புச் சொல்ல வேண்டும். |
| (ii) பந்தி 7.2 | அதிகாரசபையின் செயலாற்றுகையை மதிப்பாய்வு செய்வதற்காக ஆரம்ப செயலாற்றுகை சுட்டி மற்றும் செயற்பாட்டு செயலாாற்றுகை சுட்டி நிறுவப்பட்டு அதற்காக திறைசேரியின் அங்கிகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | இலங்கை மகாவலி அதிகாரசபையின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்காக ஆரம்ப செயலாற்றுகை சுட்டிகள் மற்றும் செயற்பாட்டு செயலாற்றுகை சுட்டி உட்பட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் அச்சுப் பிரதி அமைச்சுச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. திறைசேரியின் அங்கீகாரத்திற்காக குறிப்பிட்ட ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்காக அமைச்சுச் செயலக | அமைச்சிலிருந்து வினவி அதற்கான திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஊ) | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த அரச தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டல் கோவையின் பந்தி 2.3 | மூலோபாயத் திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டிற்காக வரிசை அமைச்சுச் செயலாளர் ஊடாக அரச தொழில் முயற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2024 செப்தம்பர் 13 திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக 2024 இரண்டாவது திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் அச்சுப் பிரதி சமர்ப்பிக்கப்பட்டு அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | மூலோபாயத் திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.8 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபை பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் ஒன்றிணைந்து மகாவலி வலையங்களின் தொழில் முனைபவர்களுக்காக தேவையான ஆரம்ப வசதிகள் ஏற்படுத்தி விவசாயம்சார் கால்நடை வளர்ப்பு, பெறுமதி கூட்டிய மற்றும் ஏனைய கைத்தொழில்கள் சார்ந்த உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைக்கு சேர்ப்பதன் மூலம் மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் குறிக்கோளுடன் செயற்படுத்தப்பட்டிருந்த சிறு மற்றும் மத்திய அளவிலான 3 கடன் திட்டங்களில் மகாவலி சவிய மற்றும் மகாவலி சுரகும் கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்குவதற்காக 2006, 2010, 2017 ஆண்டுகளின் போது வழங்கியிருந்த ரூபா 151.94 மில்லியனிற்கான தொகையில் 2024 ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 131.1 மில்லியன் தொகை கடனாக வழங்கப்பட்டிருந்தது. இந்த மகாவலி சவிய மற்றும் மகாவலி சுரகும் கடன் திட்டத்தின் கீழ் கடனாக பெற்றிருந்த இந்தத் தொகைக்காக வங்கியினால் அறவிடப்படும் வட்டித் தொகையில் | ‘‘மகாவலி சவிய’’ கடன் திட்டத்தின் உடன்படிக்கையின் படி பிரதேச அபிவிருத்தி வங்கி 8 சதவீத வட்டியொன்று அறவீடு செய்து அந்த வங்கி தனது செலவுகளை தீர்ப்பதற்காக முழுத்தொகையையும் பயன்படுத்தியிருந்தது. முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படாத பணத் தொகைக்காக உரிய வருடாந்த சாதாரண சேமிப்பு வட்டி வீதாசாரத்தின் கீழ் வட்டி வருமானம் ஒன்று உரித்தாகின்றது. அந்த வட்டி வருமானம் ஆரம்ப மூலதனத்துடன் சேர்க்கப்பட்டு முதலீட்டாளர்களுக்கு கடன் தொகை வழங்குவதற்காக பயன்படுத்தப்படுகின்றது. ‘‘மகாவலி சுரகும்’’ கடன் திட்டத்தின் கீழ் அப்போது லங்கா புத்ர அபிவிருத்தி வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 76 மில்லியனிற்கான தற்போதைய நிதியத்தின் மூலம் கடன் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்தக் கடன் திட்டத்தின் கீழும் | வழங்கப்படுகின்ற கடனுக்காக அறவிடப்படுகின்ற வட்டியின் பகுதியொன்று அதிகாரசபைக்கு கிடைக்கக்கூடியவாறு குறிப்பிட்ட உடன்படிக்கைகளை திருத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| எதுவித தொகையும் அதிகாரசபைக்கு வழங்கியிருக்கவில்லை. | வழங்கப்படுகின்ற கடன் தொகைக்காக கிடைக்கின்ற வட்டி வருமானத்தின் 4 சதவீதம் மற்றும் வழங்கப்படாத கடன் தொகைக்காக சாதாரண சேமிப்பு வட்டி சதவீதத்தின் கீழ் கிடைக்கக்கூடிய வட்டி வருமானம் அதிகார சபையின் வருமானம் என கிடைக்கப் பெறாத போதிலும், சுழல் நிதியத்திற்கு சேர்க்கப்பட்டு கடன் வழங்குவதற்காக பயன்படுத்தப்படுகின்றது. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,884,296 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,201,724 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 3,682,572 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு அரச மீண்டுவரும் ஏற்பாடுகள் கிடைத்தல் ரூபா 2,072,178 தொகை முதல் (ரூபா 257,474) வரை 112 சதவீதத்தினால் குறைவடைதல் மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 851,986 தொகை முதல் ரூபா 3,023,771 வரை 255 சதவீதத்தினால் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மகாவலி பீ வலையத்தை சேர்ந்த கந்தகாடு பிரதேசத்தில் 3770 ஏக்கருக்கான தரைப் பிரதேசத்தில் விவசாயம் மற்றும் பண்ணை விலங்கு அபிவிருத்தி செயற்திட்டமொன்றுக்காக சுற்றாடல் தாக்க மதிப்பாய்வு அறிக்கை தயாரிப்பதற்கான ஒப்பந்த வேலை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்திற்கு ரூபா 6.54 மில்லியன் தொகைக்காக 2021 செப்தம்பர் 28 திகதி வழங்கப்பட்டு ரூபா 3.21 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br>அமைச்சரவை தீர்மானத்தின் படி இந்தக் காணியின் உரிமை தேசிய பண்ணை விலங்குகள் சபைக்கு சாட்டப்பட்ட காரணத்தினால் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்த இந்த சுற்றாடல் தாக்க மதிப்பாய்வு அறிக்கை சாட்டப்பட வேண்டியது எந்த | இது தொடர்பாக 2025.05.16 திகதி அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின் படி இலங்கை மகாவலி அதிகாரசபை, நீர்ப்பாசன அமைச்சு (சட்டப் பிரிவு) மற்றும் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி அதிகாரசபையுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதில் அணுகியிருந்த தீர்மானங்கள் பின்வருமாறு ஆகும்.<br>(i) உத்தேச கந்தகாடு செயற்திட்டத்திற்காக EIA அறிக்கை தயாரிப்பதற்குரிய நிலுவைத் தொகை NLDB நிறுவனத்தினால் செலுத்த முடியாது.<br>(ii) அதற்காக மகாவலி | அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக விடயங்கள் சமர்ப்பிக்கும் போது உரித்தாக்குவதற்கு உத்தேசித்துள்ள தரைப் பிரதேசம் தொடர்பாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்துடன், சுற்றாடல் தாக்க மதிப்பாய்வு அறிக்கையொன்று தயாரித்தல் தொடர்பாக ஒப்பந்த வேலையொன்றுக்கு அணுகியிருந்ததெனவும், மற்றும் அதற்காக மேலும் செலுத்த வேண்டிய தொகை தொடர்பாக குறிப்பிடப்படாமை தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்திற்கு என மற்றும் இதற்கான கொடுப்பனவுகள் எந்த நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பாக அறுதியான இணக்கப்பாட்டொன்றுக்கு அணுகுவதற்கு முடியாமல் போதல் ஆகியவற்றினால் உரிய சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.<br>முறையான திட்டமொன்று இன்றி இவ்வாறு செலவிடப்பட்டிருந்த ரூபா 3.21 மில்லியன் தொகை தற்போது விளைவற்ற செலவொன்றென ஆகியிருந்தது. | அதிகாரசபையின் தொழில்நுட்பக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அதனூடாக EIA அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு மீதிக் கொடுப்பனவு செய்வதற்காக பரிந்துரை பெற்றுக்கொள்ளல் மற்றும் அதன்படி, கொடுப்பனவு மேற்கொள்ளல்<br>(iii) நிலுவைத் தொகையை செலுத்தி ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக் கழகத்துடன் மேற்கொண்டிருந்த உடனபடிக்கையை இரத்துச் செய்தல். | விசாரணையொன்று நடாத்தி அதற்கு பொறுப்பான நபர்களிடம் விளைவற்ற செலவுகளை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையினால் பாற்பசுக்கள் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மகாவலி பீ, சீ, டீ, எல் மற்றும் உடவளவ வலையங்களில் புல் பயிர்ச் செய்வதற்காக 2,802 ஏக்கர் வழங்கப்பட்டு கால்நடை போசாக்கை முன்னேற்றுவதற்குரிய செயற்பாடுகள் அடங்கிய நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு 2020 திசெம்பர் 31 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், எந்தக் காணியேனும், புற்பயிர்ச் செய்கைக்காக புற்பயிச்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், எல் வலையத்தில் வெகரதன்ன புற்தரையில் சுற்றாடல் பரிசோதனை மற்றும் தொல்பொருள் மதிப்பாய்வுப் பரிசோதனை மற்றும் நிலஅளவை அலுவல்களுக்காக ரூபா 6.57 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | முன்னைய சனாதிபதிச் செயலாளரின் அறிவுரையின் படி இலங்கை மகாவலி அதிகாரசபையின் காணிகள் வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. எனினும், தற்போதைய சனாதிபதிச் செயலாளரின் 2025.01.09 திகதிய கடிதத்தின் படி கௌரவ விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் மீது மகாவலி அதிகாரசபையின் நிருவாகத்தின் கீழ் காணப்படும் அரசாங்கக் காணிகள் வழங்குவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | புற்பயிர்ச் செய்கையாளர்களுக்காக காணிகள் வழங்குதல் தொடர்ந்தும் தாமதப்படுத்தாமல் எதிர்பார்த்த நலன்களை நெருங்கிக்கொள்ள வேண்டும். |
| (இ) | மகாவலி பீ வலையத்தில் விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாய பயிர்கள் உற்பத்திச் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக சுமார் 540 ஏக்கர் நிலப் பகுதியொன்று முதுவெல்ல வெலிகந்த பிரதேசத்தில் வழங்குவதற்கு 2020 | இந்த செயற்திட்டத்திற்காக சுற்றாடல் அங்கீகாரம் 2025.04.04 திகதி எமக்குக் கிடைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த செய்திட்டம் சுற்றாடல் அங்கீகார நிபந்தனையின் பிரகாரம் செயற்படுத்துவதற்காக உரிய பணிப்பாளர்களுடன் | விரைவாக எதிர்பார்த்த விளைவுகளை நெருங்குவதற்காக முதலீட்டுச் செயற்திடடத்தை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த முதலீட்டு செயற்திட்டங்களில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்காக கொழும்பு பல்கலைக் கழகத்திற்கு ரூபா 2.62 மில்லியன் தொகை 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்பட்ட ஆண்டில் இருந்து 05 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், எதுவித முதலீட்டுச் செயற்திட்டமேனும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கலந்துரையாடல்கள் நடாத்தியுள்ளதுடன், இந்த கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக அனைத்துப் பிரிவுகளுக்கும் அறிவுறுத்தப்பட்டது. | |
| (ஈ) | மகாவலி அதிகாரசபையின் அதிகார பிரதேசத்தை சேர்ந்த நீர்த் தேக்கங்களுக்கு தேவையான மீன் குஞ்சிகள் மகாவலி வளையம் சார்ந்து உற்பத்தி செய்வதற்காக நிகழ்ச்சித் திட்டமொன்று 2021 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, சீ, எச், ஹுருலுவெவ மற்றும் வளவ ஆகிய வலையங்களில் குள முறைமைகள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2025 மே 20 திகதி அளவிலும் எச் வலையத்தில் மாத்திரம் குளங்கள் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. ஏனைய வலையங்களுக்காக ரூபா 2.04 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், குளங்கள் நிர்மாணிக்கும் அலுவல்கள் திட்டமிடப்பட்டிருந்தவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் அந்தப் பணம் விளைவற்ற செலவொன்றாக ஆகியிருந்தது. | மகாவலி சீ வலையத்தில் நீர்த்தேக்கங்களுக்காக மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்வதற்காக மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான ரத்கித பண்ணையில் குள முறைமையொன்று நிர்மாணிப்பதற்கு 2021 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.<br><br>எனினும், கௌரவ நீர்ப்பாசன அமைச்சரினால் 2022.11.16 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி மகாவலிப் பண்ணை அரச தனியார் கூட்டு முயற்சி செய்முறையொன்றாக தனியார் முதலீட்டார்களை தொடர்புகொண்டு நடாத்திச் செல்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமையால், தொடர்ந்தும் மகாவலி பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காக நிதி ஒதுக்குதல் நிறுத்தப்பட்டிருந்தது. அதன்படி, மீண்டும் குளங்கள் நிர்மாணிக்கும் அலுவல்களை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | வழங்கப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் படி நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொண்டு மேலும், தாமதப்படுத்தாமல் செலவிடப்பட்டிருந்த பணத்திலிருந்து நலன்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மகாவலி 10 வலையங்களை சார்ந்து “உரிமை நிகழ்ச்சித் திட்டம்” 2024 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களில் மகாவலி 204,002 குடியேற்ற வாசிகளுக்கு காணிக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 02 இன் கீழ் உறுதிகள் வழங்குவது இலக்காக காணப்பட்டது. இங்கு காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் குடியேற்றவாசிகளிடம் காணப்படுகின்ற 69,774 காணிகளின் கொடைப் பத்திரம் மற்றும் அனுமதிப்பத்திரம் காணிகளின் முழுமையான உரிமை வழங்கும் குறிக்கேளுடன் அதிகாரசபைக்கு திருப்பி எடுக்கப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 திகதி அளவில் 26,669 உறுதிகள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டு மீண்டும் குடியேற்றவாசிகளுக்கு வினியோகிக்கப்பட்டிருந்தது. அவை மொத்த இலக்கின் 13.2 சதவீதமாக காணப்பட்டதுடன், 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக அதிகாரசபையினால் ரூபா 38.8 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.<br><br>அவ்வாறாயினும், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளாவது விவசாய மற்றும் வதிவிட அலுவல்களுக்காக அரச காணிகளை பங்கீடு செய்தல், பயன்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் இதன் மூலம் காணிகள் காணப்படாத நபர்களுக்காக வதிவிட மற்றும் விவசாய அலுவல்களுக்காக காணிகள் வழங்குதல் அதன் மூலம் ஆக்கபூர்வமான விவசாய அலுவல்களுக்காக அரச காணிகளை பயன்படுத்துவதன் மூலம் உணவு பாதுகாப்பை ஏற்படுத்தி கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், குறைந்த வருமானமுடைய மக்களுக்கு முக்கியத்துவமளிப்பதன் மூலம் | 204,002 மகாவலி குடியேற்றவாசிகளுக்கு அறுதி உறுதிகள் வழங்குவதற்கு குறிக்கோளாக இருந்த போதிலும், காணிகளை பெறுவோரினால் அறுதி உறுதிகள் பெற்றுக்கொள்ளவதற்காக 69,744 கொடைப்பத்திரம் மற்றும் அனுமதிப்பத்திரம் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவற்றில் 55,823 வரைபடங்கள் பெற்றுக்கொள்வதற்காக நிலஅளவையாளர்கள் அதிகாரசபைக்கு அனுப்பப்பட்டிருந்தது. அவ்வாறு அனுப்பப்பட்டிருந்தவைகளி 43,869 தொகைக்காக வரைபடங்கள் கிடைத்திருந்தது. கிடைத்திருந்த வரைபடங்களுக்காக 26,669 அறுதி உறுதிகள் பதிவு செய்யப்பட்டு மீண்டும் குடியேற்ற வாசிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. மீதியான எண்ணிக்கை குறைவடைவதற்கு கொடைப்பத்திரம் மீண்டும் ஒப்படைத்தலில் தாமதம், கொடைப்பத்திரத்தை ஈடுவைத்து கடன் பெற்றிருத்தல், ஆயுள் அனுபவம் சாட்டும் அலுவல்கள் தாமதம், பதிலாள் தொடர்பான சிக்கல்கள் காரணமாக இருந்தது. | உரிமை நிகழச்சித் திட்டத்தின் மூலம் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மீரப்பட்டுள்ளதா என பரிசோதனை மேற்கொண்டு காணி அபிவிருத்திச் சட்டத்தின் குறிக்கோள்கள் எதிர்பார்க்கப்பட்ட விதமான நிறைவேற்றிக்கொள்வதற்காக பொருத்தமான பொறிமுறையொன்று அறிமுகப்படுத்த வேண்டும். |

அவர்களுக்கு நியாயம் ஒன்று பெற்றுக்கொடுத்தல், விவசாய காணிகள் சிறுதுண்டுகளாக பிரிக்கப்படுவதை தடுத்தல் மற்றும் விவசாய காணிப் பகுதிகள் பொருளாதார அலகு ஒன்றாக பேணிச் செல்லல், காணியை விற்பனை செய்தல், காணியை குத்தகைக்கு கொடுத்தல் அல்லது கடனுக்காக அணவல் செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களை வரையறுத்தலும், அதன் மூலமும் காணியை பயன்படுத்தல் தொடர்பாக அரச கட்டுப்பாட்டினை பேணிச் செல்லலை உறுதிப்படுத்தியிருந்தது.

எவ்வாறாயினும், இந்த ‘‘உரிமை நிகழ்ச்சித் திட்டம்’’ இன் கீழ் முழுமையான உரிமையை பொதுமக்களுக்கு வழங்குவதன் மூலம் மேற்கூறிய குறிக்கோள்கள் எதனையும் நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போகின்றதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) தபுத்தேகம பிரிவு 406/408 அலகில் அ.க.பி. 80 இன் துண்டு இலக்க 366 அரச காப்பு ஒன்றென ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையினால் இந்தக் காணிப் பகுதியில் இருந்து தபுத்தேகம பொருளாதார நிலையத்தின் குப்பை முகாமைத்துவத்திற்காக 05 ஏக்கர் காணியும், வன ஆச்சிரமத்திற்காக 20 ஏக்கர் காணியும், கொய்யா பயிர்ச் செய்கைக்காக 10 ஏக்கர் காணியும் மற்றும் திராட்சைப் பயிர்ச் செய்கைக்காக 12 ஏக்கர் காணியும் வழங்கப்பட்டிருந்து. இது தொடர்பாக பின்வரும் அதவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2005 ஆண்டில் திராட்சை பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்டிருந்த 12 ஏக்கர் காணி அந்தச் விடயத்திற்காக பயன்படுத்தியிருக்காததுடன், உரிய முறையில் குத்தகை செலுத்தாமையால், 2022 ஆண்டில் குத்தகையாளரின் குத்தகை உரிமை இரத்துச்

வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கட்டளை வழங்கப்படவுள்ளது.

நிலுவைக் குத்தகையை விரைவாக அறவீடு செய்வதற்கும் அங்கீகாரமற்றோரை வெளியேற்றி காணியை காப்பொன்றென பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த போதிலும், இணங்கியிருந்தவாறு காணியை திருப்ப அதிகாரசபைக்கு வழங்கியிருக்கவில்லை. 2024 திசெம்பர் 31 திகதி அளவில் அந்தக் காணிக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவைக் குத்தகைத் தொகை ரூபா 489,625 தொகையாக காணப்பட்டது. | | |
| (ii) | கொய்யா பயிர்ச் செய்கைக்காக வழங்கியிருந்த 10 ஏக்கர் காணி குத்தகையாளர்களினால் பின்னர் தனியார் கம்பனியொன்றுக்கு சட்டரீதியற்ற முறையில் ரூபா 3 மில்லியன் தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அந்த 10 ஏக்கர்களுக்கு மேலதிகமாக அண்டியுள்ள 8 ஏக்கர் காணி அந்த கம்பனியினால் தனது பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | உரிமையை திருப்பி எடுப்பதற்கான சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| (iii) | இந்தக் காப்பில் கிழக்கு எல்லையில் 2/3 ஏக்கர் எண்ணிக்கையொன்று ஒரு நபரினால் அங்கீகாரம் இன்றி அனுபவிக்கப்பட்டு வருவதுடன், அதில் மா தென்னை போன்ற நீண்ட கால பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. தபுத்தேகம வலைய முகாமைத்துவரினால் இது தொடர்பாக வதிவிட திட்ட முகாமையாளருக்கு அறிவித்திருந்த போதிலும், அந்த அங்கீகாரமற்ற பயிர்ச் செய்கையாளரை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தக் காப்புப் பிரதேசத்தில் ஒரு நபர் மாத்திரமன்றி பல நபர்களினால் நீண்ட காலம் முதல் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இது தொடர்பாக களப் பரிசோதனை மேற்கொண்டு பரிந்துரைகள் பெற்றுக்கொண்டு தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது. | அங்கீகாரமற்றவர்களை அகற்றி காணிகளை அரச காப்பொன்று என பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | காப்பின் 20 ஏக்கர் காணி அளவொன்று 2021 ஆண்டில் வன ஆச்சிரமமொன்றுக்காக வழங்கப்பட்ட போதிலும், தபுத்தேகம வதிவிட செயற்திட்ட முகாமையாளரினால் அந்த 20 ஏக்கருக்கு புறம்பாக பல குடில்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததென அந்த முழு எண்ணிக்கையையும் | பணிப்பாளர் (காணிப் பயன்பாடு மற்றும் திட்டமிடல்) இனால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள 20 ஏக்கர்கள் சட்டரீதியாக வழங்குவதற்காக தேவையான ஆவணங்கள் வழங்கும் படி வன ஆச்சிரமத்திற்கு அறிவிக்கப்பட்டது. | அதிகாரசபைக்கு சொந்தமான உணர்வுபூர்வமான வலையங்கள் மற்றும் பிரதேசங்களை பாதுகாத்துக்கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவை செய்யும் போது 87 ஏக்கர் எண்ணிக்கையொன்று காணப்படுகின்றதெனவும், அதற்கு புறம்பாக மேலும், குடில்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதெனவும், அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | ரஜவெல்ல குடியிருப்பை தனியார் கம்பனியொன்றுக்கு மு.பி.மகா 4971 காணி உறுதியில் 03 மற்றும் 05 ஆம் இலக்க காணித்துண்டுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2009 ஆண்டு முதல் வேறு கம்பனியொன்று முறைசாரா விதமாக காணியில் செயற்பட்டு வருகின்றது. வாணிப காணிப் பகுதிகளை முறைசாரா விதமாக பிறர்மயப்படுத்தல் மற்றும் குத்தகைத் தொகையை செலுத்தாமைக்காக தெரிவு செய்தல் தன்மையை இரத்துச் செய்வதற்காக 2019 நவம்பர் 06 திகதி பணிப்பாளர் நாயகம் அங்கீகரித்திருந்த போதிலும், இந்தக் காணி முறைசாரா விதமான பிறர்மயப்படுத்தப்பட்டு 14 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து உரிய முறையில் குத்தகை அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | காணிகளை வழங்குதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், தற்போது அனுபவிப்போரின் பெயரில் காணியின் குத்தகை உரிமையை முறைப்படுத்துவதற்காக விசாரணையொன்று மேற்கொள்வதற்கு அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. எனினும், மீண்டும் மகாவலி காணிகள் வழங்குவதற்காக ஜனாதிபதிச் செயலாளரின் அங்கீகாரக் கடிதம் கிடைத்திருப்பதனால் அது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் காணிகள் வழங்கப்பட வேண்டும். |
| (ஈ) | வெனிலா, மிளகு, கருவா மற்றும் இஞ்சி சார்ந்த உற்பத்திகளை தயாரிக்கும் நிலையமொன்றை நிறுவுவதற்காக கொத்தமலை கடதொர குடியேற்றத்தில் 0.226 ஹெக்டயரைக் கொண்ட காணிப் பகுதியொன்று தனியார் கம்பனியொன்றுக்கு 2021 ஜனவரி 05 திகதி அனுபவிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. காணியின் 75 சதவீதத்திற்கு அண்மித்த எண்ணிக்கையொன்று அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன், 2025 மே 20 திகதி அளவில், காணி வழங்கப்பட்டு 04 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், மொத்த பெறுமதி மதிப்பீட்டின் படி குத்தகை | 2023.06.03 திகதி வதிவிட திட்ட முகாமையாளர் (ஈ) வலையம் மற்றும் உரிய விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுடன் களப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இந்தக் காணி முதலீட்டாளர்களினால் எதுவித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டிருந்தது. அதன்படி, இதனை இரத்துச் செய்து ஆக்கபூர்மான செயற்திட்டமொன்றுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை | விரைவாக குத்தகை உடன்படிக்கையொன்றுக்கு அணுகுவதற்கு அல்லது அனுபவித்தலை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் நிலுவை குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எடுப்பேன். | |
| (உ) | திகன வதிவிட திட்ட முகாமையாளர் அலுவலகத்தின் கீழ் முதலீட்டுச் செயற்திட்டமொன்றென வழங்கப்பட்டிருந்த, தொரகல தேயிலைத் தொழிற்சாலை மற்றும் காணி 1992 ஆண்டு முதல் தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆதனம் நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 2012 ஆண்டு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், குத்தகை உடன்படிக்கையொன்றுக்கு அனுகியிருந்ததற்கான சான்றுகள் கோப்பில் காணப்படவில்லை. 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்த ஆதனங்களுக்காக ரூபா 808,469 இற்கான குத்தகை நிலுவையொன்று காணப்பட்ட போதிலும், 2024 திசெம்பர் 18 திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அந்தத் தொழிற்சாலை இயந்திர உபகரணங்களுடன் மூடப்பட்டு காணப்பட்டது. | விரைவாக குத்தகை தொகை செலுத்துமாறு குத்தகையாளருக்கு அறிவிக்கப்பட்டது. எனினும், இதுவரை குத்தகை செலுத்தியிருக்காததுடன், சட்ட ரீதியாக குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்கும் தொடர்ந்தும் தொழில் முயற்சி மேற்கொள்ளப்படாவிடின் குறைபயன்பாட்டு செயற்திட்டமொன்று என கணித்து குத்தகை உரிமையை இரத்துச் செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | விரைவாக நிலுவை குத்தகை அறவீடு செய்வதற்கும், பின்னர் குத்தகையின் உரிமையை இரத்துச் செய்து புதிய முதலீட்டாளருக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | கொத்மலை ஊனகல்ஓயா தோட்ட பங்களா சுற்றாடல் நேய களிப்பிடமொன்றாக பேணிச் செல்வதற்கு 2017 ஆகஸ்ட் 16 திகதி முதல் நபரொருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. மீண்டும் அந்த ஆதனம் 2023 ஆகஸ்ட் மாதத்தில் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு நடாத்திச் செல்வதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு சாட்டப்பட்டிருந்ததுடன், 2024 திசெம்பர் மாதம் 18 திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது பங்களாவின் படலை மூடப்பட்டு பூட்டு போடப்பட்டிருந்தது. திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டிருந்ததென வெளிப்புறத்திலிருந்து அவதானிக்கப்படவில்லை. | பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன், 2017 ஆகஸ்ட் 16 திகதி முதல் 30 வருடங்களுக்காக ஊனகல்ஓயா தோட்ட பங்களா (0.739 ஹெக்டயர்) நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. குத்தகையாளரின் வேண்டுகோளின் படி 2023.06.23 திகதிய பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் படி இந்த ஆதனம் 2023.08.13 திகதி தனியார் கம்பனியொன்றுக்கு சாட்டப்பட்டிருந்ததுடன், தற்போது இந்த தோட்ட பங்களாவின் பராமரிப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டவாறு தனியார் கம்பனி செயற்படாவிடின் ஆதனத்தை திருப்தி எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், இந்த தோட்ட பங்களாவை நவீனமயப்படுத்தி சுற்றாடல் நேய விடுமுறை களிப்பிடமொன்றாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | கொத்மலை செயற்திட்டதிற்காக குடியிருப்புக்கள் ஏற்படுத்தும் நோக்கில் கொடகலையில் அமைந்துள்ள | கொத்மலை திட்டத்திற்காக குடியிருப்புக்கள் ஏற்படுத்தும் குறிக்கோளுடன் கொடகல | நிலுவை குத்தகையை விரைவாக அறவிடுவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கும், |

ஹெரின்டன் தோட்டத் தொகுதி சாரின் க்ரொஸ் காணியில் 48.35 ஏக்கர் காணியொன்று ரூபா 4.76 மில்லியன் தொகை செலுத்தி 1985 ஆகஸ்ட் 20 திகதி அதிகாரசபையினால் தனதாக்கியிருந்தது. எனினும், குறிக்கோளுக்கு புறம்பாக 1994 பெப்ரவரி 04 திகதி இந்தக் காணிப் பகுதியில் 25.47 ஏக்கர் இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கைத்தொழில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2025 மே 20 திகதி அளவில் அந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படாத நிலைமையில் காணப்பட்டதுடன், அங்கு குடியிருப்புக்கள் ஏற்படுத்தியிருத்தல் அல்லது பயிர்ச் செய்கை நிறுவியிருத்தல் மேற்கொண்டிருக்கவில்லை.

மேலும், இந்தக் காணியில் 2005 ஏப்ரல் 30 திகதி அப்போதைய கொத்மலை வதிவிட திட்ட முகாமையாளரினால் மனிதவள அபிவிருத்திச் சங்கத்திற்கு 22.88 ஏக்கர் காணி குத்தகைக்கு எடுப்பது தொடர்பாக சங்கத்தின் யாப்பில் ஏற்பாடுகள் காணப்படாத சந்தர்ப்பத்தில் நீண்ட கால குத்தகை அனுமதிப்பத்திரம் மூலம் குத்தகைக்கு கொடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

சங்கத்திற்கு காணியொன்று வழங்கும் இயலுமை காணப்படுவது 05 வருடங்களுக்கான உச்ச மட்டத்தின் கீழ் மாத்திரம் காணப்படுவதுடன், 2025 மார்ச் 17 அளவில் இந்தக் காணி குத்தகைக்கு வழங்கப்பட்டு 20 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்தது. இந்தக் காணியின் குத்தகைக் காலம் 2017 ஒக்தோபர் 31 திகதியின் பின்னர் நீடிக்கப்பட்டிருக்காததுடன், 2024 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 1.67 மில்லியனிற்கான நிலுவைத் தொகையொன்று காணப்பட்ட போதிலும், சட்ட ரீதியான குத்தகை உடன்படிக்கையொன்று இரு தரப்பினரினாலும் ஏற்படுத்தியிருக்காமையால், நிலுவைக் குத்தகைத் தொகையை அறவீடு செய்யும் போது சிக்கல்

ஹெரின்டன் தோட்டத்தின் சாரின் க்ரொஸ் காணியின் 48 ஏக்கர் தனதாக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 10.31 ஹெக்டயர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிறுவனத்திற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், மீதியான 9.26 ஹெக்டயார் காணி மனிதவள அபிவிருத்திச் சங்கத்திற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

வலையக் குழுவொன்றின் மூலம் இந்த இரண்டு பகுதிகளையும் முறைப் பிரகாரம் பரிசோதனை செய்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பதற்கு செயற்படுவேன்.

தொடர்ந்தும் இணங்கியவாறு அபிவிருத்தி மேற்கொள்ளப்படாவிடின் குத்தகை உரிமையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், சட்ட ரீதியான குத்தகை உடன்படிக்கைகளுக்கு அணுகியிருக்காமை தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடாத்தி அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | தன்மையொன்று ஏற்படக்கூடும் என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஏ) | மகாவலி வலையத்தில் தட்பவெப்ப பக்க விளைவுகளை குறைப்பதற்காக செயற்படுத்துவதற்கு உத்தேசித்திருந்த உயர் தொழில்நுட்ப பசுமை இல்லம் நிர்மாணிப்பதற்கான முன்னோடிச் செயற்திட்டம் 2019 ஆண்டின் போது தனியார் கம்பனியொன்றுக்கு கொத்மலை பழைய வலைய அலுவலக வளாகத்திலுள்ள 0.3035 ஹெக்டயர் நிலப் பரப்பொன்று வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் மூலம் மகாவலி வலையங்களில் (விக்டோரியா மற்றும் எச் வலையத்தில்) மகாவலி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் 100 பேர்களுக்காக தொழில்நுட்ப பயிற்சி வழங்குவதற்கும் தொழில் வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் வழங்குவதற்கும் இணங்கியிருந்தது. எவ்வாறாயினும் 2019 ஆண்டு முதல் இந்தக் கம்பனியினால் அனுபவித்து வருகின்ற இந்தக் காணிக்காக அந்த நாள் முதல் இன்று வரை குத்தகை தொகை ஏதும் அறவீடு செய்திருக்காததுடன், நிலஅளவை வரைபடமொன்று தயாரித்து முறைப் பிரகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2024 திசெம்பர் 18 திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது இங்கு 02 பசுமை இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டு பயிர்ச் செய்கைகள் பேணிச் செல்லப்படுகின்றதென அவதானிக்கப்பட்டதுடன், இணங்கியிருந்தவாறு மகாவலி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சி அலுவல்கள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் படி காணியின் பெறுமதியில் வருடாந்தம் 04 சதவீதம் குத்தகைத் தொகையொன்று அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், இதுவரை அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. அதற்கான காரணம் ஆவணங்கள் உரிய முறையில் கிடைக்கப் பெறாமை மற்றும் நிறுவனத்தினால் எமது கடிதங்களுக்கு பதில் அனுப்பப்படாமை ஆகிய விடயங்களாகும்.<br>பிரதான பெறுமதி மதிப்பீட்டாளரின் பெறுமதி மதிப்பீட்டின் பின்னர் குறிப்பிட்ட கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | விரைவாக நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கும், முறைப் பிரகாரம் காணிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், முன்னோடிச் செயற்திட்டத்தின் நலன்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | 2019 ஆண்டு வரை வ/ப மகாவலி பண்ணை விலங்கு கம்பனிக்கு குத்தகைக்கு கொடுத்துள்ள அதிகாரசபையின் தபுத்தேகமயில் அமைந்துள்ள 25 ஏக்கர் காணியைக் கொண்ட நிராவிய பண்ணையின் குத்தகைக் காலத்தை நீடிப்பதற்கு அல்லது அந்தக் காணியை மீண்டும் உரித்தாக்கிக்கொள்வதற்கு | இந்தக் கம்பனி தற்போது கால்நடை வள அபிவிருத்தி அமைச்சின் கீழ் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் மேற்பார்வையின் கீழ் காணப்படும் கம்பனியொன்றாக செயற்படுகின்றது. இந்த சிக்கல்களை தீர்த்துக்கொள்வதற்காக இரு | விரைவாக புதிய உடன்படிக்கையொன்றுக்கு அணுகுவதற்கு அல்லது காணியை மீண்டும் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தரப்பினர்களிடையே காணப்படுகின்ற உத்தியோகபூர்வ ஆவணங்கள், பரிமாரப்பட்டதுடன், அவற்றை ஆய்வு செய்து இந்த சிக்கலை தீர்த்துக்கொள்ள எதிர்பார்க்கின்றேன். | |
| (ஒ) | சூரிய வலுச்சக்தி முதலீட்டு செயற்திட்டங்கள் நிறுவுவதற்காக 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது அதிகாரசபையினால் 1728.304 ஹெக்டயர் நிலப் பகுதியொன்று 191 முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2025 மே 20 திகதி அளவில் 08 முதலீட்டாளர்கள் மாத்திரம் மின் உற்பத்தியை ஆரம்பித்திருந்தனர். அவ்வாறு ஆரம்பிக்கப்படாத காணிகளை வேறு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவு மத்தியில் முதலீட்டாளர்கள் முன்வராமையினால் இந்தக் கருமம் காலம் தாழ்த்தப்பட்ட போதிலும், தற்போது கனிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது. மேலும், அதிகாரசபையினால் காணிகளை வழங்குவதற்காக இணக்கப்பாடு மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அனைத்து அங்கீகாரங்கள் தொடர்பாக முதலீட்டாளர்களினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. குறிப்பிட்ட அங்கீகாரம் அனைத்தும் கிடைத்த பின்னர் காணியை விடுவிக்கும் அலுவல்கள் ஆரம்பிக்கப்படும். | இணங்கியவாறு செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாத காணிகளை இரத்துச் செய்வதற்கும் அந்தக் காணிகளை புதிய முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஓ) | 1993 ஜுன் 01 திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றின் மூலம் அதிகாரசபைக்கு உரித்தாகியிருந்த திகன விலேஜ் ரிசோட் உடன் 07 ஏக்கர் காணி மற்றும் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுடன் தனியார் கம்பனியொன்றுக்கு சாட்டப்பட்ட போதிலும், மேலும் சுமார் 03 ஏக்கர் பிரதேசமொன்று கம்பனியினால் அனுபவிக்கப்பட்டு வந்தது. 2022 நவம்பர் 21 திகதிய வழக்குத் தீர்ப்பின் படி 2023 பெப்ரவரி 26 திகதி அல்லது அத் திகதிக்கு முன்னர் உரிய முறையில் வளாகத்தை அதிகாரசபைக்கு ஒப்படைக்க வேண்டியிருந்த போதிலும், முறைப் பிரகாரம் ஆதனங்களை மீண்டும் ஒப்படைக்காமல், கம்பனி வளாகத்திலிருந்து அகன்று சென்றிருந்ததுடன், 2024 திசெம்பர் 31 திகதி அளவில் வளாகத்தின் செயற்பாட்டு அலுவல்கள் நிறுத்தப்பட்டு ஒரு வருடத்தை மிகைத்திருந்த போதிலும் அந்த | 2025.01.16 திகதி இந்த வளாகத்தின் சட்டரீதியாக அனுபவித்தல் அதிகாரசபைக்கு சாட்டப்பட்டிருந்தது. தற்போது குறிப்பிட்ட வளாகத்தின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதேபோல், சட்டரீதியாக அனுபவித்தலை அதிகாரசபைக்கு ஒப்படைத்த பின்னர் இதுவரை ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என 2025.03.24 திகதி சட்டப் பிரிவிலிருந்து அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதன்படி, சேதத்தை மதிப்பாய்வு செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அந்த மதிப்பீடு கிடைத்ததுடன், குறிப்பிட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் குத்தகைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கும் குறிப்பிட்ட கட்டிடத்திற்கும் மற்றும் அங்கு காணப்பட்ட தளபாடங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தை மதிப்பாய்வு செய்து பொறுப்பான தரப்பினரிடம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இந்தக் கட்டிடத்தை தொடர்ந்தும் அழியவடையவிடாமல் திருத்த வேலை மேற்கொண்டு அதன் மூலம் வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வளாகம் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. மேலும், 1993 ஆண்டு முதல் இந்த வளாகம் வெளி நபர்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு பல்வேறு விழாக்களுக்காக மற்றும் தங்குமிட வசதிக்காக வழங்கப்பட்டு வருமானம் உழைக்கப்பட்ட போதிலும், அதிகாரசபைக்கு எதுவித தொகையும் செலுத்தியிருக்காததுடன், பெற வேண்டியதென கணிக்கப்பட்டுள்ள தொகை ரூபா 4.5 மில்லியனாகும். | | |
| (ஔ) | கொத்மலை பிரதேசத்தில் அமைந்துள்ள அதிகாரசபையின் உத்தியோகபூர்வ வாசஸ்தளமொன்று, கொத்மலை முகாம் காணியில் காணப்படுகின்ற கட்டிடமொன்று மற்றும் தொரகல தோட்ட பங்களா உட்பட 1.311 ஹெக்டயர் காணி பல சந்தர்ப்பங்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட போதிலும், முறையான குத்தகை உடன்படிக்கையொன்று காணப்படாததுடன், கட்டிடத்திற்காக அரச பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக்கொண்டிருக்கவில்லை. இந்த கட்டிடங்களின் 57 பீ இலக்கம் கொண்ட உத்தியோகபூர்வ வாசஸ்தளத்திலிருந்து மாத்திரம் மாதாந்தம் ரூபா 3,000 வாடகைத் தொகையொன்று அறவீடு செய்யப்பட்டு வருவதுடன், ஏனைய கட்டிடங்கள் எதிலிருந்தும் அதிகாரசபையினால் வாடகைத் தொகையொன்று அறவீடு செய்திருக்கவில்லை. | முறையான குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் காணிகள் வழங்குதல் மேற்கொண்டிருக்கவில்லை என ஏற்றுக்கொள்வதுடன், வதிவிட திட்ட முகாமையாளரின் கையொப்பத்துடன், நிபந்தனைகளுன் காணிகள் ஒப்படைத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>57 பீ இலக்கம் கொண்ட உத்தியோகபூர்வ வாசஸ்தளத்திற்காக மற்றும் தோட்ட பங்களாவிற்காக வாடகை அறவீடு செய்யும் உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், வீட்டுக் குழுவின் பரிந்துரை இதுவரை கிடைத்திருக்காமையால் அந்த அலுவல்கள் தாமதமடைந்திருந்தது. | அரச பெறுமதி மதிப்பீட்டினை பெற்றுக்கொண்டு விரைவாக முறையான குத்தகை உடன்படிக்கையொன்றுக்கு அணுகுவதற்கும் குத்தகை தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், முறையான குத்தகை உடன்படிக்கைக்கு அணுகாமை மற்றும் அரச பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக்கொள்ளாமை தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | அதிகாரசபைக்குச் சொந்தமான இணைந்த கம்பனியொன்றான இயற்கை வளங்கள் முகாமைத்துவ (தனியார்) கம்பனியை ஒழிப்பதற்காக அமைச்சரவை 2019 ஆண்டில் தீர்மானம் எடுத்திருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் ஒழித்தல் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கம்பனியில் ஒழித்தல் அலுவல்களுக்காக ஒழிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது. ஒழிப்பாளர்கள் தமது கடமைகளை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கம்பனி ஒழித்தல் அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ங) | மகாவலி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் மகாவலி பண்ணைவிலங்கு மற்றும் விவசாய | 2023 ஆண்டின் போது ஒரு பகுதி இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு | அதிகாரசபையின் பெயரில் பங்குகள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வர்த்தக (தனியார்) கம்பனியின் முதலீடென ரூபா 406.38 மில்லியன் காட்டப்பட்டிருந்ததுடன், அந்தக் கம்பனி மகாவலி அதிகாரசபையின் இணைந்த கம்பனியொன்றெனவும் காட்டப்பட்டிருந்தது. இந்தக் கம்பனியின் அகவிதியில் கம்பனி மகாவலி அதிகாரசபையில் இணைந்த கம்பனியொன்றென காட்டப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபைக்காக கம்பனியினால் ஒரு பங்கேனும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தாக்கப்பட்டிருந்தது. மீதியான 02 பகுதிகளை உரித்தாக்குவதற்காக கம்பனிப் பதிவாளர் திணைக்களத்திற்கு அவற்றிற்கான ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது அந்தக் கருமங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ச) | நிதிக்கூற்றுக்களின் படி முதலீட்டுச் செயற்திட்டங்களில் இருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 171.37 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும், அவற்றில் ரூபா 43.98 மில்லியன் தொகை 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. மேலும், அதிகாரசபையின் பீ, சீ, ஜீ, எச் மற்றும் எல் வலையங்களில் நிலம் தனியார் தொலைபேசிக் கம்பனிகளுக்கு தொலைபேசி கோபுரங்கள் நிர்மாணிப்பதற்காக குத்தகைக்கு வழங்கியதன் மூலம் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 11.75 மில்லியன் தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மேலும், கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் படி வளவ, ரம்பகன்ஓயா மற்றும் மற்றும் பீ வலையத்தில் உச்ச அளவு 32 வருடங்கள் முதல் குறைந்த அளவு 06 வருடங்கள் வரையான காலப் பகுதியில் 166 முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்த காணிகளுக்காக அரச பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக்கொள்ளாமல் மொத்த பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை அறவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். உரிய தரிப்பினரை அறிவுறுத்தி நிலுவை தொகையை அறவீடு செய்வதற்கும் அவ்வாறன்றேல் சட்டச் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கும் அரச பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக்கொண்டு அதன்மீது குத்தகையை அறவீடு செய்வதற்கும் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஞ) | கொழும்பு 05 ஜாவத்த வீதியில் வீதவரி இலக்கம் 11 கொண்ட ஆதனம், கொழும்பு 05 ஜவத்த வீதி வீதவரி இலக்கம் 04 கொண்ட ஆதனம், மகாவலி கேந்திர நிலையம் | இது தொடர்பாக வரிசையமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி முறையான அடிப்படையொன்றின் மீது மகாவலி அதிகாரசபைக்குச் | இந்தக் காணிகளின் உரிமையை விரைவாக தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பௌதாலோக மாவத்த மற்றும் சரன பாதையில் அமைநதுள்ள வீட்டுத்தொகுதி மற்றும் இரத்மலானை இயந்திர வேலைத் தளம் அமைந்துள்ள வளாகம் அமைந்துள்ள காணிகளின் உரிமையை தீரத்திருக்கவில்லை. | சொந்தமான காட்டிடங்களை வெளி நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு எதிர்ப்பார்க்கின்றேன். | |
| (ட) | 2020 திசெம்பர் 14 திகதிய அமப/20/1852/317/012 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கருங்கல் வியாபாரிகளிடம் அறவிடப்பட வேண்டிய நிலுவை காணி பயன்பாட்டுக் கட்டணம் தொகையில் 75 சதவீதத்தை பதிவழிப்பதற்கும் மீதியை 36 தவணைகளில் அறவீடு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், 2023 ஆகஸ்ட் 10 திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பாக குழுக் கூட்டத்தில் உரிய முறையில் செலுத்தப்படாத முதலீட்டாளர்களுக்கு எதிராக விரைவாக பொது ஆதனச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யும் படி அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.<br>அவ்வாறாயினும், சலுகை பெற்றுக்கொண்ட 25 அகழ்வாளர்களிடம் அறவிடப்பட வேண்டிய காணிப் பயன்பாட்டுக் கட்டணம் ரூபா 64.92 மில்லியன் தொகையில் எதுவித தொகையும் அறவீடு செய்வதற்கு அதிகாரசபைக்கு முடியாமல் இருந்தது. மேலும், நிலுவைக் காணிப் பயன்பாட்டுக் கட்டணத்தை செலுத்தி முடிப்பதற்கான சலுகைக் காலமும் 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்திருந்த 23 அகழ்வாளர்களுக்கு வழங்கியிருந்த சலுகையை முறைகேடாக பயன்படுத்தி செலுத்த வேண்டிய பணத்தை சிறு பகுதிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டு வருகின்றதெனவும், அவர்களிடம் மேலும், ரூபா 149.32 மில்லியன் தொகை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்ததெனவும் அவதானிக்கப்பட்டது.<br>அதேபோல், மேற்கூறிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் சலுகை வழங்கப்பட்டிருந்த 12 அகழ்வாளர்கள், பாரியளவிலான நிர்மாண வேலைக் | அவர்களினால் செலுத்த வேண்டிய காணிப் பயன்பாட்டுக் கட்டணத்தை செலுத்தும் படி அறிவிக்கப்பட்ட போதிலும், அந்தக் கட்டணத்தை செலுத்துவதற்கு ஆரம்பித்திருக்காக செயற்திட்டக்காரர்களினால் 1982 இன் 12 ஆம் இலக்க பொது ஆதன விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற குற்றம் தொடர்பாக சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>2020.12.14 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி கணித்தல் மேற்கொள்ளப்பட்டு நிலுவைக் கட்டணம் அறவீடு செய்தல் ஆரம்பிக்கும் படி முதலீட்டாளர்களுக்கு அறிவுறுத்திய போதிலும், 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் மற்றும் நாட்டில் வெடிப்பொருட்கள் தட்டுப்பாடு காணப்பட்ட காரணத்தினால் குறிப்பிட்ட ஆண்டுகளில் அகழ்வுச் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படல் பலவீன மட்டத்தில் காணப்படுவதனால் நிலுவைத் தொகை செலுத்துவதில் பின்னடைவொன்று ஏற்பட்டிருந்தது. இந்த 23 முதலீட்டாளர்கள் தொடர்பாக சட்டச் செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய காணி பயன்பாட்டுக் கட்டணம் தொடர்ந்தும் தாமதப்படுத்தாமல் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அறவீடு செய்யப்பட வேண்டிய நிலுவைக் காணிப் பயன்பாட்டுக் கட்டணத்தை பதிவழிப்பதற்கு தீர்மானம் எடுக்கும் போது கடைபிடிக்க வேண்டிய செய்முறைகள் தொடர்பாக விசாரணையொன்று நடாத்தி அவற்றில் ஏதும் முறைகேடுகள் ஏற்பட்டுள்ளனவா என கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனிகள் மற்றும் வியாபாரிகளாக காணப்பட்டதுடன், அவர்களிடம் அறவிடப்பட வேண்டிய நிலுவைக் காணி பயன்பாட்டுக் கட்டணம் ரூபா 1,313.95 மில்லியன் தொகையாகும். அது மொத்த அறவிடப்பட வேண்டிய காணிப் பயன்பாட்டுக் கட்டணத்தில் 69 சதவீதம் ஆகிய கூடிய பெறுமதியொன்றை கொண்டிருந்தது. | | |
| (ண) | மகநெகும வீதிகள் நிர்மாணிக்கும் கம்பனி வளவ வலையத்தில் மயுராபுர அலகில் 1.2141 ஹெக்டயருக்கான நிலப் பிரதேசம் ஒன்று கருங்கல் அகழ்வதற்காக 2010 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆண்டின் போது நிறுத்தப்பட்டிருந்ததுடன், அரை அங்குல கருங்கற்கள் மற்றும் ABC கலவைகள் குவிக்கப்பட்ட நிலையில் கைவிடப்பட்டு செல்லப்பட்டிருந்தது. இந்த கருங்கற்கள் அமைந்துள்ள காணி 2024 ஆகஸ்ட் 16 திகதி தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்டிருக்கும் போது இந்த கருங்கற்களின் பெறுமதியை பெற்றுக்கொள்வதற்கு அல்லது அகழ்வு செய்யப்பட்ட கருங்கற்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. வட்டாரம் முகாமையாளர் (மயுராபுர) இனால் 2025 ஜனவரி 27 திகதி இடப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டது எனவும், அங்கு மொத்தமாக அரை அங்குலக் கற்கள் 813.5 கியுப்களும் மற்றும் ABC கலவை 1138 கியுப்களும் குவிக்கப்பட்டு இருந்ததெனவும், வதிவிட திட்ட முகாமையாளர் (வளவ) இனால் அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், 2025 மார்ச் 05 திகதி மேற்கொள்ளப்பட்ட கள கணக்காய்வுப் பரிசோதனையின் போது இந்த குவிக்கப்பட்டிருந்த கருங்கற்கள் வேறு தரப்பினரினால் அகற்றப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | கம்பனியினால் குறிப்பிட்ட காணியில் இருந்து 2015 ஆண்டின் பின்னர் அகன்று சென்றிருந்ததெனவும், இந்த அரை அங்குல கருங்கற்கள் 813.5 கியுப்கள், ABC கலவை 1138 கியுப்களின் எண்ணிக்கையை அறுதியாக கணிக்கப்பட்ட பின்னர் அதற்குரிய தொடர் நடவடிக்கைகள் முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | 2024 ஆகஸ்ட் 16 திகதி தனியார் கம்பனியொன்றுக்கு காணியை வழங்கும் போது அகழ்வு செய்யப்பட்ட கருங்கற்கள் எண்ணிக்கையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பொறுப்புக்களை புறக்கணித்திருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (த) | அதிகாரசபைக்கு சொந்தமான கட்டிடங்கள் 11 நிறுவனங்கள் 04 | இது தொடர்பாக வரிசை அமைச்சுச் செயலாளருடன் | நிலுவை நீர், மின்சாரம் மற்றும் சுத்திகரிப்புக் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றிற்குரிய நீர் மற்றும் மின்சார சுத்திகரிப்பு பில் பத்திரங்கள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 திகதியளவில் குறிப்பிட்ட நிறுவனங்களினால் மீளாளிப்பு செய்யப்படாத நிலுவை நீர் மின்சாரம் மற்றும் சுத்திகரிப்பு பில் பத்திரங்களின் பெறுமதி ரூபா 15.62 மில்லியன் தொகை எனினும், அந்தத் தொகையை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கலந்துரையாடப்பட்டு முறையான அடிப்படையொன்றின் கீழ் அதிகாரசபைக்கு சொந்தமான கட்டிடங்கள் வெளி நிறுவனங்களுக்க வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மீளளிப்பு செய்யப்பட வேண்டிய பணம் தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனங்களில் இருந்து இந்த அதிகாரசபைக்கு நீர், மின்சாரம் மற்றும் சுத்திரிப்புச் சேவை வழங்குவதற்காக தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 12,243,589.22 தொகையாகும். | கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ந) | அதிகாரசபைக்கு சொந்தமான 43 களஞ்சியங்கள் 2009 ஆண்டு முதல் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த களஞ்சியங்களின் உரிமையை நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு உரித்தாக்குவதற்கு அல்லது குத்தகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தக் களஞ்சியங்கள் வாடகை செலுத்துவதில் இருந்து விடுவிக்கப்பட்டு நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு உரித்தாக்குவதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்று சமர்ப்பிக்கும் படி அவ்வாறன்றேல் குத்தகை தொகையை செலுத்துவதற்கு நெற் சந்தைப்படுத்தும் சபை இணங்காவிடின், அந்த நிறுவனம் நிறுவப்பட்டுள்ள சட்டத்தின் படி அரச காணிகள் இலவசமாக பெற்றுக்கொள்வதற்கு இயலுமை காணப்படுகின்றது என ஏற்பாடுகள் காணப்படின் அந்தச் சட்டத்தின் பிரதியொன்றுடன் விரைவாக சமர்ப்பிக்கும் படி, நெல் சந்தைப்படுத்தும் சபைத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பதில் அனுப்பப்படாமையால் நினைவூட்டல் கடிதங்களுக்கும் பதிலளிக்கப்படாமையால் ‘‘இறுதி அறிவித்தல் என’’ 2025.07.04 திகதி நெற் சந்தைப்படுத்தும் சபைத் தலைவருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது. அதன் முன்னேற்றத்தின் படி தொடர் நடவடிக்கை எடுப்பேன். | களஞ்சியங்களை முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்கு அல்லது குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ப) | 1979 இன் 07 ஆம் இலக்க அரச காணிகள் (உரித்தனை திருப்ப பெற்றுக்கொள்ளல்) சட்டத்தின் பிரிவு 180 இன் படி அங்கீகாரம் இன்றி காணிகளை ஆக்கிரமித்தல் தொடர்பான தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு ஆகும். | | |
| | (i) கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் படி அதிகாரசபையின் 10 வலையங்களில், 6259 அங்கீகாரமற்றோர், 5370 ஏக்கர் காணிகளை தனதாக்கிக்கொண்டிருந்தனர். எவ்வாறாயின் வழக்கு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 369 ஏக்கர்களுக்கு மாத்திரமாகும். மேலும், 2023 மே 23 திகதியின் பின்னர் எச் வலையத்திலில் மீஜலாவ வட்டாரத்தில் 1.575 ஏக்கர்களும், ரம்பகென்ஒய வலையத்தில் 72.6 ஏக்கர்களும், விக்டோரியா வலையத்தில் 87.5 ஏக்கர்களும் அதிகாரசபையினால் கைப்பற்றப்பட்ட காணிகளை மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | காட்டப்பட்டுள்ள 10 வலையங்களில் அங்கீகாரமற்றோரினால் குறிப்பிட்ட காணிப் பகுதிகள் நீண்ட காலம் முதல் இதுவரை முறைசாரா விதமாக அனுபவித்து வருவதனாலும், அவர்களினால் தற்போது அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையாலும், இந்தக் காணிப் பகுதிகளை அனுபவிக்கும் நபரக்களுக்கு முறைப்படுத்துவதற்காக வலைய மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அங்கீகாரமற்றவைகளை அகற்றி அதிகாரசபைக்கு சொந்தமான உணர்வுபூர்வமான வலையங்கள் மற்றும் பிரதேசங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) அதிகாரசபையினால் தனியார் கம்பனியொன்றுக்கு முதலீட்டு செயற்திட்டமொன்றுக்காக சீ வலையத்தின் கிராந்துருகோட்டே அலகின் உல்கிடிய நீர்த்தேக்கத்திற்கு அண்மித்து வழங்கப்பட்டுள்ள 511.52 ஏக்கர் காணிக்கு மத்தியில் அமைந்துள்ள சுமார் 50 ஏக்கர் அளவான நிலப் பகுதியொன்று அதன் உரிமை கோரும் தனியார் தரப்பினர் ஒருவரினால் 2014 மார்ச் 15 திகதி முதல் 2024 மார்ச் 14 திகதி வரையான 10 வருட காலப் பகுதிக்காக தனியார் கம்பனியொன்றுக்கு பயிர்ச் செய்கைக்காக ரூபா 6.52 மில்லியன் தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த தரைப் பகுதியின் | இந்தக் காணி இதுவரை அறுதியுறுதி காணியொன்று என கணித்து நடவடிக்கை எடுத்த போதிலும், ஏற்பட்டுள்ள சிக்கல் தன்மையை கவனத்தில் எடுத்து காணியின் உரிமை தொடர்பாக விரிவான அறிக்கையொன்று காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் மகியங்கன பிராந்திய அலுவலகத்தினால் காணியின் உரிமையை தீர்க்கும் ஆணையாளர் நாயகத்தினால் இது தொடர்பான அறிக்கையொன்று வழங்குமாறு வேண்டப்பட்டுள்ளது என எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை கிடைத்தவுடன் இது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | இந்தக் காணியின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக சட்டச் செயற்பாடுகள் 2025 மே 20 திகதி வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ம) | 2022 நவம்பர் 22 திகதியின் பின்னர் காணிகளை வழங்குவதை நிறுத்தும் படி சனாதிபதியினால் பரிந்துரை வழங்கப்பட்ட போதிலும், பீ, சீ, டீ, ஈ, ஜீ. எச் மற்றும் ஹுருலுவெவ ஆகிய 07 வலையங்கள் தொடர்பாக வதிவிடம் மற்றும் வீட்டுத் தோட்டம் என கூட்டுத்தொகை 339 காணித்துண்டுகள் மற்றும் வாணியம் என 366 காணித்துண்டுகளும் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக கண்டறிந்த பின்னர் உயர் அதிகாரமுடைய சுதந்திரக் குழுவொன்று நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரின் கட்டளையின் படி 2023 ஆகஸ்ட் 25 திகதி நியமனம் செய்யப்பட்டிருந்தது. குழுவின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக 2025 மே 20 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முறையான செய்முறையொன்றுக்கு புறம்பாக காணிகள் பகிர்தளிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் யார் என கண்டறிந்து தேவையான நடவடிக்கை விரைவாக எடுப்பதற்கு செயற்படுவேன். | குழுவின் அவதானிப்பு மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ய) | 2024 திசெம்பர் 31 திகதி அளவில் 10 வலையங்களில் மொத்த முதலீட்டுக்காக 797 காணித்துண்டுகள் அதாவது 16143 ஏக்கர்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 326 காணித் துண்டுகள் குறை அபிவிருத்தியுடன் காணப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | எல் வலையத்தில் பல்வேறு காரணங்களினால் 17 காணிப் பகுதிகள் குறை அபிவிருத்தி மட்டத்தில் காணப்பட்டது.<br>மகாவலி பீ வலையத்தில் 74 செயற்திட்டங்கள் குறை அபிவிருத்தி மட்டத்தில் காணப்பட்டது. இந்த செயற்திட்டங்கள் உரிமையாளர்களுக்கு காணியை அபிவிருத்தி செய்யும் படி அறிவிக்கப்பட்டது. இந்த குறை அபிவிருத்திக் காணிகளை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யாவிடின் குத்தகை உரிமையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன்.<br>மகாவலி சீ வலையத்தின் வெகரகல வட்டாரத்தில் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்த இரண்டு குறை அபிவிருத்திக் காணிகள் காணப்பட்டதுடன், மேலும், ஒரு | அபிவிருத்தி செய்யப்படாத மற்றும் குறை அபிவிருத்தியுடைய அனைத்துக் காணிகளின் குத்தகை உரிமையை இரத்துச் செய்து மீண்டும் உரித்தாக்கி பொருத்தமான கருமங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

காணியை இரத்துச் செய்வதற்காக அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மீதியான வட்டாரங்களில் 15 குறை அபிவிருத்திக் காணிகளை இரத்துச் செய்யும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மொரகஹகந்த வலையத்தின் சுற்றாடல் நிலைமையின் படி இந்தக் காணிப் பகுதிகளில் எதிர்பார்த்த அபிவிருத்தி செய்தல் தாமதமடைந்துள்ளது.

விக்டோரியா / ஈ வலையத்தின் முதலீட்டுச் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த 36 காணித்துண்டுகள் ஆகும். அவற்றில் 03 காணித் துண்டுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. மீதியான 33 காணித் துண்டுகளில் 11 காணித துண்டுகள் குறை அபிவிருத்தியுடன் காணப்படுகின்றதென கள பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

வலவ வலையத்தின் தற்போது அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காத முதலீட்டுச் செயற்திட்டங்களை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றில் தற்போது 21 செயற்திட்டங்களுக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

எச் வலையத்தில் குறை அபிவிருத்தியுடன் காணப்படும் 06 காணித்துண்டுகள் காணப்பட்டது. இந்தக் காணித் துண்டுகளுக்காக தற்போது குத்தகை அறவீடு செய்யப்படுகின்றது. அதேபோல், இந்த 03 குறை அபிவிருத்தி காணித் துண்டுகள் இரத்துச் செய்வதற்காக தற்போது இனங்காணப்பட்டுள்ளது.

ரம்பகன்ஓயா வலையத்தில் 10 முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக 10 காணித் துண்டுகளில் குறை அபிவிருத்தியுடன் காணப்பட்ட 04 காணித்துண்டுகள் இரத்துச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரத்துச் செய்யப்படும் காணிகளிலிருந்து

| | | | |
|---|---|---|---|
| | | நிலுவைக் குத்தகையை அறவீடு செய்வதற்காக பணிப்பாளர் (சட்டம்) அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ர) | மகாவலிக் காணிகளை வழங்குவதற்காக தேசிய கொள்கையொன்று காணப்படாததுடன், வரையறுக்கப்பட்ட வளமொன்றான காணிகள் வெளிப்படைத் தன்மையுடன், விவசாயம், குடியிருப்பு, தொழிற்சாலை மற்றும் உல்லாசப் பிரயாணம் போலவே சுற்றுச்சூழல் சமநிலைக்காக மிகவும் திட்டமிடலுடன், அறிவுரீதியான நுழைவொன்றின் மூலம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மகாவலி காணிகள் வழங்குதல் பாரிய மகாவலி திட்டத்தின் படி ஒவ்வொரு வலையத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு ரீதியான திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன், ஆரம்பமாக உத்தேச பூமிக்குரிய ஆரம்ப காணித் தகவல்கள் உத்தேச காணிகளின் தற்போதைய நிலைமை, அண்மித்த காணிகளின் கையாளுகை அடிப்படை விடயங்கள் மற்றும் விவசாய தொழில்நுட்ப, சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பிரிவுகள் தொடர்பாக வலைய மட்டத்தில் கவனம் செலுத்தப்படுவதுடன், ஒட்டுமொத்த கட்டமைப்புக்கு ஏற்படுகின்ற தாக்கம் மற்றும் ஏனைய வலையங்களுக்காக ஏற்பாடுகின்ற தாக்கங்களை கவனத்தில் எடுத்து பணிப்பாளர் (காணி கையாளுகை மற்றும் திட்டமிடல்) பரிந்துரையை வழங்கப்பட்டு திட்டமிட்ட பிரகாரம் அறிவு ரீதியான நுழைவொன்றினூடாக பௌதீக திட்டமிடல் பரிந்துரைகள் வழங்கப்படுவதுடன், பரிந்துரைகள் வழங்கப்படுகின்ற அனைத்துக் காணிகளினதும், புவியியல் தரவுத் தகவல்கள் முறைமையூடாக நாளதுவரை ஆக்கல் மேற்கொள்ளப்படுகின்றது. | மகாவலிக் காணிகள் வழங்குவதற்காக தேசிய கொள்கையொன்று அறிமுகப்படுத்தி பௌதீக திட்டப் பரிந்துரைகளை கடைபிடித்து காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறிவு ரீதியான நுழைவு செய்முறையொன்றின் அடிப்படையில் காணிகள் வழங்கப்பட வேண்டும். |
| (ல) | விவசாய மற்றும் வர்த்தக அபிவிருத்திக் கருமங்களுக்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் மகாவலி அதிகார பிரதேசத்தில் காணிகள் வழங்கப்படும் போது வழங்கப்படக்கூடிய காணிகளின் எண்ணிக்கை பிரதேச அடிப்படையில் பொருத்தமான முதலீட்டுச் செயற்திட்டங்கள் வழங்கக்கூடிய குறைந்த மற்றும் உச்சமட்ட காணிகள் | முதலீட்டு செயற்திட்ட அறிக்கைகள் மதிப்பாய்வுக் குழுவொன்றின் மூலம் மதிப்பாய்விற்கு உள்ளாக்கப்பட்டு மதிப்பாய்வு சபை அங்கீகாரத்தின் கீழ் முறையான செய்முறையொன்றிற்கு இணங்க காணிகள் வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றது. மகாவலி வலையத்திற்காக | முதலீட்டாளர்களை தெரிவு செய்யும் போது மூலப் பிரமாணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அதன்படி, முதலீட்டாளர்கள் தெரிவு செய்யப்படுவதுடன், காணிகள் பயன்படுத்தும் தேவைப்பாட்டின் படி அறிவு ரீதியான திட்டங்கள் நாளதுவரை ஆக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை தொடர்பாக பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அறுதியான மற்றும் தெளிவான கொள்கையொன்று காணப்படவில்லை. முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக காணிகள் வழங்கப்படும் போது நபர்களின் வேண்டுகோளின் படி காணிகள் வழங்கப்பட்டிருப்பதுடன், முதலீட்டாளர்களை தெரிவு செய்வதில் மூலப் பிரமாணங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 3 பிரிவின் படி காணிகளை கையாளுவதற்காக அடிப்படை கட்டமைப்புசார் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2011 ஆண்டின் பின்னர் தற்போதைய காணி பயன்பாட்டுத் தேவைப்பாட்டின் படி அந்த கட்டமைப்புசார் திட்டம் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டமைப்புசார் திட்டம் தயாரித்தில் எதிர்வரும் 20 வருடங்களுக்காக அபிவிருத்தி தேவைப்பாடுகளை கவனத்தில் எடுத்து மேற்கொள்ளப்படுகின்றதுடன், 2011 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் 20 வருட தேவைப்பாட்டை கவனத்தில் எடுத்து மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, கால ரீதியாக முன்வருகின்ற விசேட தேவைப்பாட்டுத் திட்டமிட்டத்தின் படி வலைய பௌதீக திட்டமிடல் பரிந்துரையின் அடிப்படையில் கவனம் செலுத்தப்பட்டு திருத்தப்படுவதுடன், 2030 ஆண்டில் அடுத்த திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | வேண்டும். |
| (வ) | 2018 ஆண்டின் போது வெளிஓயா கஜபாபுரவில் இருந்து நெருங்கேணி சந்தி வரையான பாதையின் நிர்மாண வேலையின் கொடுப்பனவின் போது ரூபா 43.36 மில்லியனிற்கான மிகைக் கொடுப்பனவு ஒன்றினை வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் இருந்து அறவீடு செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெளிஓயா கஜபாபுரவில் இருந்து நெருங்கேணி சந்தி வரையான பாதையின் நிர்மாண வேலைக்காக 2018 ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 390,085,714 இற்கான தொகையொன்று வழங்கியிருந்ததுடன், அதன் மீதித் தொகையான ரூபா 43,363,909.15 இற்காக சம்பத் நுவரவிலிருந்து கஜபாபுர வரையான பாதையின் 1.9 கிலோமீற்றர் பகுதியை நவீனமயப்படுத்துவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை இணங்கியிருந்ததுடன், அவற்றில் ஒரு பகுதியை மாத்திரம் நவீனமயப்படுத்தி அந்த ஒப்பந்த வேலை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, இந்த தற்காலிக நவீனமயப்படுத்தல் அலுவல்களுக்காக ரூபா 17,556,259.24 தொகையொன்று செலவிடப்பட்டுள்ளதென வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொ/சேவை) இற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீதித் தொகையாகிய ரூபா 25,797,649.92 இற்கான | மிகையாக செலுத்திய தொகையை அறவீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொகை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு மீண்டும் செலுத்துவதாக அறிவித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்மாண வேலை) இனால் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ழ) | 2025 மார்ச் 24 திகதிய ENV/GEN/Audit Report-2023 இலக்கம் கொண்ட பணிப்பாளர் (வன மற்றும் சுற்றாடல்) இன் கடிதத்தின் படி 2024 நவம்பர் 30 திகதி அளவில் நில புனரமைப்புக் கட்டணம் அறவிடப்பட்டிருக்காத 21 கருங்கல் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றதென அவதானிக்கப்பட்டது. | 2024 நவம்பர் 30 திகதியில் உள்ளவாறு நில புனரமைப்புக் கட்டணம் அறவீடு செய்திருக்காத 21 செய்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த 21 செயற்திட்டங்கள் தொடர்பான தற்போதைய முன்னேற்றம் இணைப்பொன்றின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. | விரைவாக நில புனரமைப்புக் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ள) | மணல் அகழ்வு மூலம் ஏற்படுகின்ற சுற்றாடல் தாக்கத்தை குறைப்பதற்காக மகாவலி கங்கையின் இரு மருங்கிலும் 60 மீற்றர்கள் காப்பு எல்லைகள் அடையாளப்படுத்துவதற்காக 2018 ஆண்டின் போது மற்றும் 2019 ஆண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 1.61 மில்லியன் தொகை நில அளவைத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2025 மே 20 திகதி வரை காப்பு எல்லைகள் அடையாளமிடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நில அளவை அலுவல்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எல்லைகளை சுட்டிக் காட்டுவதற்காக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என நில அளவைத் திணைக்களத்தினால் எமது அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | காப்பு எல்லைகளை அடையாளப்படுத்துவதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ற) | மகாவலி சீ வலையத்தில் மணல் அகழ்வதற்காக மணல்துறை அனுமதிப்பத்திரம் வழங்கும் போது ஏற்பட்டுள்ள முறைகேடுகள் தொடர்பாக நீர்ப்பாசன அமைச்சினால் நடாத்தப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் படி அரச வளங்கல் முறைகேடாக பயன்படுத்துவதற்கு இடமளித்தல் தொடர்பாக முன்னைய வதிவிட திட்ட முகாமையாளர்களுக்கு எதிராக தாபனக் கோவையின் படி நடவடிக்கை எடுப்பதற்கும் கணியப் பண்டங்கள் அகழ்வு தொடர்பாக முழுமையான பொறுப்பு மேற்கொண்ட காணி கையாளுகைப் பிரிவின் முன்னைய பணிப்பாளருக்கு எதிராக தாபனக் கோவையின் 2 ஆவது அட்டவணையின் குற்றமொன்று | சீ வலையத்தின் மணல் அகழ்வுத்துறை அனுமதிப்பத்திரம் வழங்கும் போது ஏற்பட்டிருந்த முறைகேடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கை பரிந்துரையின் படி பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பிரதிப் பணிப்பாளர் (சட்டம்) அறிவுறுத்தப்பட்ட பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் (சட்டம்) இற்கு ஓய்வு பெற்றுள்ள உத்தியோகத்தர் தொடர்பாக தாபனக் கோவையின் | அதிகாரசபைக்கு ஏற்பட்டுள்ள நிதி நட்டத்தினை அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளைவித்தல் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், 2025 மே 20 திகதி அளவிலும், குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் அல்லது பணம் அறவீடு செய்தல் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவல்லை. | ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுப்பதற்கு இயலுமை காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பிரதிப் பணிப்பாளர் சட்டத்தினால் வதிவிட திட்ட முகாமையாளர் (சீ) இற்கு 2024.07.04 திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டு மணல் துறையாளர்களுக்கு எதிராக பொது ஆதனச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல்கள் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் படி அறிவிக்கப்பட்டது. | |
| (ன) | அதிகாரசபையினால் ஒழுங்குறுத்தப்படாத ஆனால், மகாவலி விசேட அதிகாரப் பிரதேசத்தின் மின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சிறு அளவிலான 65 மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணம் அறவீடு செய்வதற்காக முறையான உடன்படிக்கைகளுக்கு அணுகியிருக்கவில்லை. | இந்த மின் உற்பத்தி நிலையங்களுக்காக 15 வருடங்கள் செல்லுபடியாகக்கூடிய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த அனுமதிப்பத்திரங்களை நாளதுவரை ஆக்கும் போது மகாவலி அதிகாரசபைக்கு இந்தச் செயற்திட்டத்திற்காக தலையிடுவதற்கு இயலுமையொன்று ஏற்படுவதனால் எதிர் காலத்தில் இது தொடர்பான அலுவல்கள் மேற்கொள்வதற்கும் பொருத்தமானவாறு உடன்படிக்கை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. | இந்த மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து நீரேந்து பிரதேச முகாமைத்துவக் கட்டணம் அறவீடு செய்வதற்கு பொருத்தமான செய்முறையொன்று நிறுவப்பட வேண்டும். |
| (ஃ) | அதிகாரசபையின் வளங்களைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்த மகாவலி பண்ணை விலங்கு மற்றும் விவசாய வியாபார (தனியார்) கம்பனி தெரிவு செய்யப்பட்ட வெளி முதலீட்டாளர் ஒருவருடன் அரச தனியார் கூட்டு வியாபாரமாக மறுசீரமைப்பதற்காக 2018 ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும், அந்தக் கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | புதிய அரசின் கொள்கைளின் படி இவ்வாறான பண்ணைகள் பிரதேச விவசாயிகளின் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்தல் குறிக்கோளாக கொண்டிருந்தமையால் புதிய பணிப்பாளர் சபை நியமனம் செய்யப்பட்டு கம்பனி மீண்டும் மறுசீரமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கம்பனியை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (அஅ) | கண்டி மாவட்டத்தில் கடவத்சதர பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கெடம்பே கிராம உத்தியோகத்தர் பிரிவில் மகாவலி கங்கைக்கு மத்தியில் தீவு அமைந்துள்ள பிரதேசம் வராதென்ன, ஹத்திந்த சுற்றாடல் | இந்த சிற்றுண்டிச்சாலை சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசமாக வெளியிடுவதற்கு முன்னரிருந்தே நடாத்தப்பட்டு வரும் வியாபார நிலையமொன்றாக காணப்படுவதனால் | இந்த தீவு அமைந்துள்ள பிரதேசம் சுற்றாடல் பாதுகாப்பு வலையமொன்றாக பேணிச் செல்வதற்கு தேவையான வேலைத் திட்டங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பாதுகாப்பு வலையம் என 2017 ஜூன் 19 திகதி 2024/06 இலக்கம் கொண்ட வர்த்தமானியின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இந்தப் பிரதேசத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையொன்றுடனான காணிப்பகுதி வருடாந்த குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 2024 ஆகஸ்ட் 09 திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | சிற்றுண்டிச்சாலையை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன்படி, குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக அரச பெறுமதி மதிப்பீடொன்றை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்த போதிலும், இது வரை பெறுமதி மதிப்பீடு கிடைத்திருக்கவில்லை. | செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆஆ) | தடுத்தேகம் நிராவிய பண்ணையில் 146 ஏக்கர் காணிப் பகுதியொன்று விவசாய நடவடிக்கைக்கான உடன்படிக்கையொன்றுக்கு அணுகாமல் 2020 ஆண்டில் இராணுவத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அங்கு இராணுவ உத்தியோகத்தர்கள் பண்ணையின் சுற்றுலா விடுதி மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களில் தங்கியிருந்த போதிலும், எதுவித அறவீடுகளும் அதிகாரசபையினால் மேற்கொண்டிருக்கவில்லை. | நிராவிய பண்ணை நிலப் பரப்பில் இலங்கை இராணுவத்திற்கு வழங்கியிருந்த காணிப் பகுதி தொடர்ந்தும் இலங்கை இராவத்தினாலேயே பேணிச் செல்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, குறிப்பிட்ட வாடகை தொகையை அறிவீடு செய்தல் தொடர்பாக (கட்டிடத்தை பயன்படுத்தல் மற்றும் நீர், மின்சாரம் பயன்படுத்துதல் ஆகியவை) இரு தரப்பினர்களினாலும் தற்போது கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றுலா விடுதி மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தளத்திற்காக கட்டணம் மற்றும் வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இஇ) | மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக மின்சக்தி உற்பத்தி செய்வதற்காக விக்டோரியா, ரன்தெனிகல, ரன்தபே, கொத்மலை, போவதென்ன, மாதுருஓயா, பொல்கொல்ல மற்றும் உடவலவ ஆகிய நீர்த்தேக்கங்களில் நீர் தடுத்து வைக்கப்பட்டு வழங்கப்படுவதுடன், இந்த நீர்த் தேக்கங்களை பராமரித்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக அதிகாரசபையினால் வருடாந்தம் பாரிய செலவொன்று மேற்கொள்ளப்படுகின்றது. 2024 ஆண்டின் போது நீர் மின்சக்தி உற்பத்திக்காக இந்த நீர்த் தேக்கங்களில் இருந்து 11106 நீர்க் கியுப்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றிலிருந்து 2273.1 இற்கான மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன், எதுவித தொகையும் அதிகாரசபையினால் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மின்சக்தி உற்பத்திக்கு மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்குகின்ற நீரிற்காக இதுவரை அதிகாரசபைக்கு எதுவித கொடுப்பனவும் மேற்கொள்ளப்படவில்லை என ஏற்றுக்கொள்கின்றேன். இது தொடர்பாக இலங்கை மின்சார சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் பல கலந்துரையாடல்கள் நடாத்திய போதிலும், அந்த நிறுவனங்களில் இருந்து அதற்காக வெற்றிகரமான பதிலேதும் கிடைத்திருக்கவில்லை. | மின் உற்பத்திக்காக விடுவிக்கப்படும் நீர் தொடர்பாக நியாயமான கட்டணமொன்று அறவீடு செய்வதற்கான வேலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 மற்றும் 2018 ஆண்டுகளின் போது காணித் தகவல் முறைமையொன்று நிறுவி செயற்படுத்துவதற்காக ரூபா 6.97 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 60 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருந்த போதிலும், 2025 மே 20 திகதி அளவிலும், காணி முகாமைத்துவ தகவல் முறைமை செயற்படாமையால் அந்தச் செலவு விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | இலங்கை மகாவலி அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற அனைத்துக் காணிகளின் தகவல்களையும் தரவுக் களஞ்சியப்படுத்தும் குறிக்கோளுடன் 2016 ஆண்டு e-slim நிகழ்ச்சித்திட்டத்திற்கு இலங்கை தகவல் தொழில்நுட்ப முகாவராண்மை, அறிவுரை மற்றும் வழிகாட்டல் மீது தனியார் கம்பனியொன்றுக்கு இந்த முறைமையை அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் 2016 ஆண்டில் உடன்படிக்கை மேற்கொண்டு ஒப்படைக்கப்பட்டது. 2016 – 2017 ஆண்டுகளின் பேது தரவு முறைமையில் அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு அரச காணிகள் கட்டளைச் சட்டத்திற்குரிய 5,000 காணித் துண்டுகளுக்கு மிகையான எண்ணிக்கையொன்று தரவு முறைமைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. 2017 ஆண்டில் உடன்படிக்கை மேற்கொண்ட காலப் பகுதிக்கு வருடாந்தம் செலவிடப்படுகின்ற ஏற்பாடுகள் பற்றாக்குறையாக இருப்பது மற்றும் நாட்டில் காணப்பட்ட கொரோன தொற்றுநோய் நிலைமையின் மீது இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக தொடர்ந்தும் உடன்படிக்கை மேற்கொள்ள முடியாமல் போனது. மீண்டும் e-slim முறைமை மகாவலி அதிகாரசபையில் செயற்படுத்துவதற்காக பெறுகை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட கம்பனியுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | விரைவாக இந்தத் தகவல்கள் முறைமை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கந்தளாய் சூரியப்புர மகாவலி கங்கையின் பாதுகாப்பு அணைக்கட்டுக்கு எதிர் முனையில் | மகாவலி கங்கையின் வெள்ளப் பாதுகாப்பு அணைக்கட்டு அரிப்படைந்திருந்த துன்மோதர | நிலவுகின்ற சிக்கலை விரைவாக தீர்த்து செயற்திட்டத்தை பூர்த்தி |

| | | | |
|---|---|---|---|
| | படிந்திருக்கும் மணல் படிவினை அகழ்ந்து விற்பனை செய்து உழைக்கும் வருமானத்தில் இருந்து அரிப்படைந்துள்ள வெள்ளப் பாதுகாப்பு அணைக்கட்டை மறுசீரமைப்பதற்கான செயற்திட்டமொன்று 2019 ஆகஸ்ட் 06 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அணைக்கரையின் மறுசீரமைப்பு 06 மாதங்களுக்குள் பூர்த்தி செய்வதற்கு 2019 ஏப்ரல் 01 திகதி இணங்கி அதன் பின்னர் 2022 ஜூலை 19 வரை பல சந்தர்ப்பங்களில் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. முக்கியத்துவமான கருமம் ஒன்றென 2019 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் 05 வருடங்களும் 08 மாதங்களும் கடந்திருந்த போதிலும், 2025 மே 20 திகதி அளவிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | எனும் இடத்தில் அமைந்துள்ள மணல் படிவினை அகற்றும் வெள்ளப் பாதுகாப்பு அணைக்கட்டினை செப்பனிடல் மேற்கொள்ளும் படி சூரியபுர விவசாய அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் படி சட்டமா அதிபர் திணைக்களத்தின் தீர்மானத்தின் படி சுமார் 103128 மணல் கியுப்கள் எண்ணிக்கையொன்று அகற்றுவதற்காக செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அந்தப் பிரதேசத்தில் கணப்படுகின்ற ஏனைய மணற்துறை உரிமையாளர்களின் எதிர்ப்பு, கோவிட் தொற்றுநோய் நிலைமை, தட்பவெப்ப நிலைமை காரணமாக உடன்படிக்கைக் காலத்தினுள் செயற்திட்டத்தினை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. | செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மொரகஹகந்த நீர்த்தேக்கம் நிர்மாணித்த காரணத்தினால் வீடுகள் மற்றும் ஆதனங்களை இழந்த மக்களை மீள்குடியேற்றும் அலுவல்கள் 2012 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2022 நவம்பர் அளவில் முடிவடைந்திருந்த போதிலும், இவ்வாறு மீள்குடியேற்றிய மக்களுக்கு குடிப்பதற்கு மற்றும் ஏனைய அலுவல்களுக்கு தேவையான நீர் வழங்கல் தொடர்பாக திட்டமிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2025 மே 20 திகதி அளவிலும், வெல்லேவெல மற்றும் நவகுருவெல குடியேற்றிய 473 குடும்பங்களுக்கு குடிப்பதற்கு மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கு நாளாந்த பவுசர்களின் மூலம் நீர் வழங்குவதற்கு நேரிட்டிருந்ததுடன், 2023 ஆண்டில் ரூபா 40.73 மில்லியன் தொகையும், 2024 ஆண்டு ரூபா 45.37 மில்லியன் தொகையும் அதற்காக செலவிடப்பட்டிருந்தது. | மொரகஹகந்த வலையத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மொரகஹகந்த நீர்த்தேக்கத்திற்காக அந்த பிரதேசத்தில் வசித்த மக்களை லக்கல வெல்வெல மற்றும் குருவெல பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டதுடன், அந்த மக்களுக்காக நீர் வசதிகள் வழங்கப்பட்டிருக்காமையால், பவுசர்கள் மூலம் குடிநீர் மற்றும் பாவனை நீர் வழங்குவதற்காக மொரகஹகந்த களுகங்கை செயற்திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்திருந்தது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் எமக்கு அறிவிக்கப்பட்டிருந்தவாறு 2025 ஆகஸ்ட் மாதம் அளவில் நீர் வழங்கலை உரிய நிலைமைக்கு ஆக்கி முறைப் பிரகாரம் மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். எதிர் காலத்தில் காணிகள் | தொடர்ந்தும் தாமதப் படுத்தாமல் குடியேற்றவாசிகளுக்கு காணிகள் வழங்குவதற்கு மற்றும் நீர் வசதிகள் வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேலும், இவ்வாறு மீள்குடியேற்றிய மக்களில் 161 குடும்பங்களுக்காக வயல் காணிகள் வழங்கப்பட்டிருக்காமையால், அவர்களின் வாழ்வாதாரம் இழக்கப்பட்டிருந்தமையால், அவர்களுக்கு ஆரம்பத்தில் செயற்திட்டத்தின் மூலமும், 2022 ஜூலை மாதம் முதல் அதிகாரசபையின் மூலம் கூட்டுத்தொகை ரூபா 20.65 மில்லியனிற்கான இந்த மீள்குடியோறியவர்களுக்கு உலர் உணவு வழங்குவதற்கு 2024 திசெம்பர் 31 திகதி அளவில் செலவிடப்பட்டிருந்தது. | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமாக இருப்பதனால காணிகளை வழங்கி முதலாவது விளைச்சலை பெற்றுக்கொண்ட பின்னர் உலர் உணவுப் பங்கீட்டினை நிறுத்துவதற்கு முடியும் என குறிப்பிட விரும்புகின்றேன். | |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரத்தினபுரி மாவட்டத்தின் மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்காக வளவ வலையம் மூன்று புதிய வட்டார அலுவலகங்கள் கொடகவெல, வலிகெபொல மற்றும் கொலன்ன ஆகிய அதிகாரப் பிரதேசங்களில் 2024 ஆண்டில் நிறுவப்பட்டிருந்தது. இந்த அலுவலகங்களை நிறுவுவதற்காக ஆரம்பத்தில் ரூபா 4.02 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், மேலும் மாதாந்த கட்டிட வாடகை என ரூபா 100,000 தொகையும் 2025 ஏப்ரல் மாதம் வரை செலுத்தப்பட்டிருந்தது. இந்த அலுவலகங்கள் அமைந்துள்ள காணி நிர்வாக அலுவல்கள் மற்றும் நீர் முறைமை பராமரிப்பு மகாவலி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படாததுடன், இந்ந மூன்று அலுவலகங்கள் மூலம் பிரதானமாக நடைபெறுவது பண்ட உதவி வினியோகம் மாத்திரமே. | வளவ வலையம் தற்போது 10 வட்டாரங்களை கொண்ட அபிவிருத்தி கருமங்கள் நிறைவேற்றப்படுகின்ற மகாவலி வலையமொன்றாகும். எனினும், 2024.02.20 திகதி வரை வளவ வலையத்தின் அபிவிருத்தி அலுவல்கள் 06 வட்டாரங்களை பிரதானமாக கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. 2024.02.20 திகதி கொலன்ன அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த கிராம உத்தியோகத்தர் பிரிவொன்று மகாவலி அதிகாரசபையினூடாக அபிவிருத்தி செய்ய வேண்டும் என வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட பின்னர் 07 ஆவது வட்டாரம் என கொலன்ன வட்டாரம் வளவ வலையத்தின் அபிவிருத்தி அதிகாரப் பிரதேசமாக சேர்க்கப்பட்டது. 2024.05.14 திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் சந்தர்ப்பம் அளவில் வலிகெபொல, கொடகவல மற்றும் செவனகல ஆகிய வட்டார அலுவலகங்கள் | புதிதாக வட்டார அலுவலகங்கள் நிர்மாணிப்பதற்கு முன்னர் அவற்றின் சாத்தியங்களை உரிய முறையில் பரிசோதனை செய்யும் வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிறுவியிருக்காமையால், எனது ஆலோசனையின் படி புதிய வட்டாரத்தில குடியிருப்பாளர்களின் உடலாரோக்கிய வசதிகளை முன்னேற்றுவதற்காக ஒதுக்குவதற்காக செயற்படுத்தும் திட்டமொன்றினூடாக முன்மொழியப்பட்டதுடன், அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் கிடைத்திருந்தது. | |
| (ஆ) | வளவ வலையத்தில் மாத்திரம் பாடசாலை மாணவர்களுக்கு ரூபா 47.2 மில்லியன் தொகை பெறுமதியான 385,000 தொகை பாடசாலைப் புத்தகங்கள் 2024 ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டம் பின்னர் திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்ததுடன், தேர்தல் ஆணையாளரினால் வெளியிடப்பட்டிருந்த 2394/56 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் சனாதிபதி தேர்தல் காலப் பகுதியில் அதாவது 2024 ஜூலை 26 முதல் 2024 செப்தம்பர் 21 வரை இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்துவதை இடைநிறுத்தியிருந்த காலப் பகுதியில் இது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2024 ஆண்டிற்கான செயற்படுத்தப்பட்ட திட்டத்தின் வளவ வலையத்தின் செயற்படுத்தப்பட்டிருந்த 06 வட்டாரங்களை பிரதானமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.<br>அதன் பின்னர் வளவ வலையத்தில் அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த 06 வட்டாரங்களுக்கு மேலதிகமாக புதிய அபிவிருத்தி வட்டாரம் ஒன்றென 29 கிராம சேவகர் பிரிவுகள் அடங்கிய கொலன்ன வட்டாரமும், முன்னர் செயற்பட்டிருந்த சந்திரிக்காவெவ வட்டாரத்தின் அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்திற்காக 18 புதிய கிராம சேவைப் பிரிவுகள் சேர்த்தப்பட்டு வளவ வலையத்தின் அபிவிருத்தி நிலப் பரப்பின் நீடிப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததென அமைச்சுச் செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.<br>பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கியிருந்த அறிவுரையின் படி வளவ வலையத்திற்குரிய அனைத்து வட்டாரங்களும் அடங்கக்கூடியவாறு வலையத்தின் பாடசாலைப் பிள்ளைகளுக்காக பயிற்சிப் புத்தகங்கள் வழங்கும் உத்தேச செயற்பாட்டினை உட்படுத்தி திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டம் பணிப்பாளர் சபையினால் ஆய்வு செய்து 2024.05.14 திகதி அங்கீகரம் வழங்கப்பட்டிருந்தது. | தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானிக்கு முரணாக செயற்பட்டிருத்தல் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு உரிய உத்தியோகத்தருக்கு ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2024 ஆண்டின் போது வல்சபுகல பிரதேசத்தில் 135.75 ஹெக்டயர் காணிப் பகுதியொன்று சூரிய சக்தி செயற்திட்டத்திற்காக 12 கம்பனிகளுக்கு வழங்கும் போது அது தொடர்பாக அக்கறை காட்டக்கூடிய அனைத்து தரப்பினருக்கும் பங்குபற்றுவதற்கு பகிரங்க ஊடகத்தினூடாக அறிவுறுத்தல் மேற்கொள்ளாமல், தெரிவு செய்யப்பட்ட ஆட்களுக்கு அதிகாரசபைக்கு சொந்தமான காணிகள் வழங்குவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. | பிரதானமாக மூன்று நிறுவனங்கள் இதனொடு தொடர்புபடுத்தப்படுகின்றது. அதாவது ஒழுங்குறுத்தல் நிறுவனமாகிய இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை, மின்சாரத்தை கொள்வனவு செய்யும் நிறுவனம் என இலங்கை மின்சார சபையும், காணி உரிமையாளர் என இலங்கை மகாவலி அதிகாரசபையும் உட்பட மேலும், பல நிறுவனங்கள் அடங்குகின்றன. இதன்படி, அனைத்து நிறுவனங்களும் சேர்ந்து செயற்திட்ட மதிப்பாய்வுக் குழுவொன்று (Project Approving Committee - PAC) தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அந்தக் குழுவின் மூலம் குறிப்பிட்ட மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு மின்சாரத்தை கொள்வனவு செய்யும் நியம விலைகள் மாத்திரம் காணப்படுவதுடன் மற்றும் அப்போது துறையில் காணப்பட்ட மின்சாரக் கேள்வி மற்றும் அரசுக்கு முதலீட்டுக்காக நிதி ஒதுக்குவதற்கான இயலுமை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால், முதலீட்டாளர்களிடம் கிடைத்த முன்மொழிவுகளை கவனத்தில் எடுத்து சாத்தியமான முதலீட்டாளர்களை தெரிவு செய்து முன்கொண்டு வரப்பட்டுள்ளது. | செயற்திட்டத்திற்காக காணிகள் வழங்கும் போது அக்கரையொன்று காட்டப்படுகின்ற அனைத்துத் தரப்பினரும் முன்வரக்கூடியவாறு பகிரங்க ஊடகத்தினூடாக அறிவுறுத்தல் வேலைத்திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |
| (ஈ) | சுற்றாடல்சார் மிகவும் உணர்வுபூர்வமான மற்றும் யானைகள் பாரியளவில் நடமாடக்கூடிய மற்றும் காட்டு யானை முகாமைத்துவ வலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள இலங்கையின் முட்புதருடனான வரண்ட காடுகள் என கணிக்கப்படுகின்ற இந்த நிலப் பிரதேசம் சூரிய சக்தி செயற்திட்டத்திற்காக ஒதுக்கும் போது உரிய நிறுவனங்களுடன் | நாட்டில் மற்றும் நிறுவனத்தில் நிரந்தரப் பதவிகளுக்காக நியமனம் வழங்குவதில் சிக்கல் தன்மை மற்றும் போதியளவு பதவியணியினர் காணப்படாமை போன்ற விடயங்கள் காரணமாக அடிக்கடி உத்தியோகத்தர் இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், எவருக்கு சட்டரீதியற்ற விடயங்களுக்காக இடமளிப்பது அங்கீகரிக்காததுடன், | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி காணிகள் வழங்குதல் தொடர்பாக மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுகொள்ளும் தேவைப்பாட்டிலிருந்து தவிர்ந்து காணிகள் வழங்குவது தொடர்பாக தாபனம்சார் விசாரணையொன்று |

| | | | |
|---|---|---|---|
| | கலந்துரையாடல் மற்றும பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் இந்தக் காணிகள் வழங்கப்பட்டிருந்தது.<br><br>மேலும், 50 ஏக்கருக்கு கூடிய காணிகளை வழங்கும் போது அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தமையால், இந்த தெரிவு செய்யப்பட்ட 12 கம்பனிகளுக்கும் பகுதிகளாக காணி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், நிலஅளவைக்குரிய ஆவணங்கள் போலியாக தயாரிக்கப்பட்டு நில அளவைத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து நில அளவைத் திணைக்களத்திலிருந்து உத்தியோகபூர்வமாக இந்த அளவைக்குரிய தகவல்கள் அதிகாரசபைக்கு கிடைத்திருக்காத போதிலும் மற்றும் நில அளவைகள் தொடர்பாக சிக்கல்கள் காணப்படுகின்றதென பொறுப்பான தரப்பினர் அறிந்திருந்த போதலும், இவ்வாறு காணி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இந்த 12 செயற்திட்டங்கள் தொடர்பாக நிறுவனத்தினாலும், இரகசிய பொலிஸினாலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வாறான விசாரணைகளின் பரிந்துரைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | நடாத்தி அதற்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2019 ஜனவரி 31 திகதிய 304 ஆம் இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சூரிய சக்தி செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட காணிகள் தொடர்பாக குத்தகை அறவீடு செய்வதற்கு பதிலாக முதலீட்டாளர் மின்சார சபையிலிருந்து பெற்றுக்கொள்கின்ற மொத்தத் தொகையில் 06 சதவீதம் காணிப் பயன்பாட்டுக் கட்டணம் என அறவீடு செய்யப்பட வேண்டும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிகள் அரச பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியின் 04 சதவீத குத்தகைத் தொகையென அறவீடு செய்து 30 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சூரிய சக்தி உற்பத்திக்காக ஒதுக்கப்பட்டிருந்த காணிகளில் இருந்து சூரிய சக்தி உற்பத்தி செய்த பின்னர் 06 சதவீதத் தொகையொன்று அறவிடப்படுவதுடன், சூரிய சக்தி உற்பத்தி செய்ய முன்னர் காணி வழங்கப்பட்ட போது 04 சதவீத வருடாந்தத் தொகையொன்று அறவிடப்படுகின்றது. | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி காணி பயன்பாட்டுக் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அரச காணிகள் கட்டளைச் சட்டம் திருத்தப்பட வேண்டும். |

## 3.5 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆண்டு முதல் செயற்படாது காணப்பட்ட கொத்மலை அணைக்கட்டின் பராமரிப்பு அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த பாரம் தூக்கிப் பொறி 2017 ஆண்டின் போது ரூபா 9.8 மில்லியன் செலவிடப்பட்டு திருத்த வேலை மேற்கொண்ட பின்னர், இயந்திரத்தின் ஹைட்ரொலிக் ஹோஸ் முறைமை குழாய் வெடிப்படைந்தமையால், தொடந்தும் பயன்படுத்த முடியாமல் காணப்படுகின்றது. | இந்த இயந்திரத்தை ஓட்ட நிலைமைக்கு மாற்றுவதற்காக ரூபா 10 மில்லியனிற்கு அண்மித்த தொகையொன்று செலவிட நேரிடுவதனால் இந்த திருத்த வேலை நிதிசார் ஆக்கபூர்வமற்றதென, பிரதான அணைக்கட்டுக்கள் மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டுப் பிரிவின் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | இயந்திரத்தின் திருத்த வேலை மேற்கொள்ளல் நிதிசார் பிரதிகூலமாக காணப்படின் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இயந்திரத்தில் திருத்த வேலை மேற்கொள்வதில் தாமதம் மற்றும் திருத்த வேலையின் பின்னர் இயந்திரத்தின் குழாய் வெடிப்படைதல் இடையே தொடர்புகள் ஏதும் உள்ளதா என தீர்மானிப்பதற்காக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆண்டின் போது ரூபா 1.75 மில்லியனிற்கான செலவொன்று மேற்கொண்டு தலைமை அலுவலக வளாகத்தில் CCTV கமரா முறைமையொன்று நிறுவப்பட்டிருந்த போதிலும், அந்த முறைமைக்கான சேவைகள் மேற்கொள்ளல் தொடர்பாக உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்கவில்லை. 2025 ஏப்ரல் 28 திகதி அளவில் நிறுவப்பட்டிருந்த 25 கமராக்களில் அத்தியவசியமான 08 இடங்களுக்குரிய கமராக்கள் செயற்படாமல் காணப்பட்ட போதிலும், அதற்குரிய திருத்த வேலைகள் மேற்கொள்ளவதற்கு முடியாமல் உள்ளது.<br><br>மேலும், பிரதான பாதுகாப்பு காவலரணின் CCTV கமரா முறைமைக்குரிய மொனிடர் ஒன்று காணப்பட வேண்டிய போதிலும், அதன் பரிசோதனை அலுவல்கள் மேற்கொள்ளக்கூடிய துணைக் | CCTV கமரா முறைமை நிறுவுவதற்காக 2019 ஆண்டில் ஒப்பந்த வேலைக் கம்பனியொன்றுக்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்ட போதிலும், அதேபோல், எமது விசாரணையின் போது அந்தக் கம்பனி தற்போது செயற்பாட்டில் இல்லை என கண்டறியப்பட்டது. அதன் காரணமாக முறையான பெறுகை நடைமுறை கடைபிடிக்கப்பட்டு வேறு தகைமையுடைய நிறுவனம் ஒன்றுடன் CCTV கமரா முறைமையின் சேவைகள் மற்றும் பராமரிப்புக்காக விரைவாக உடன்படிக்கை மேற்கொள்ளும் அறிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தகைமையுடைய நிறுவனம் ஒன்றுடன் சேவை மற்றும் பராமரிப்புக்காக விரைவாக உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன், செயற்படாத கமராக்களை திருத்த வேலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>மேலும், குறிப்பிட்ட சேவை பெற்றுக்கொள்வதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளாமைக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கருவிகள் பொருத்தியிருக்கவில்லை. அதேபோல், நினைவுக் கொள்திறன் ஒரு மாதம் காணப்பட வேண்டிய போதிலும், பொருத்தப்பட்டிருந்த முறைமையின் நினைவுக் கொள்திறன் ஒரு வாரமாக காணப்பட்டது. இதன்படி, ரூபா 1.75 மில்லியன் செலவிடப்பட்டு CCTV முறைமையொன்று நிறுவப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்படாமையினால் இந்தச் செலவு விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | | |
| (இ) | அதிகாரசபைக்குச் சொந்தமான பேஸ்லயின் பாதையில் அமைந்துள்ள 0.2139 ஹெக்டயர் காணி மற்றும் கட்டிட வளாகம் தற்போது கைவிடப்பட்டு அழிவடைந்து காணப்படுவதுடன், 2025 மே 20 திகதி வரை இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட கட்டிடங்கள் தளபாட உபகரணங்களின் பாதுகாத்தல் தொடர்பாக மகாவலி பாதுகாப்பு பிரிவிற்கு சாட்டப்பட்டுள்ளது. மேலும், 352 ஆவது பணிப்பாளர் சபையின் கூட்டத்தின் மூலம் காணி மற்றும் கட்டிடங்கள் களஞ்சியமொன்று மற்றும் வாகன செயற்களம் நிர்மாணிப்பதற்காக விருப்புக்களை அழைப்பதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. எனினும் அப்போது எடுக்கப்பட்ட முகாமைத்துவ தீர்மானங்களின் மீது தற்போது செயற்படாத மட்டத்தில் காணப்படுகின்றது. | காணி மற்றும் கட்டிடங்களை ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மனம்பிடிய அரலகங்வில பிரதான பாதைக்கு முன்னோக்கி 1.5 ஏக்கர் தரைப் பிரதேசம் ஒன்று சவுதி அபிவிருத்தி நிதியத்தின் கீழ் ரூபா 48 மில்லியன் செலவிடப்பட்டு 1999 ஆண்டின் போது 2 மாடிகளைக் கொண்ட 36 கடையறைகள் மற்றும் தனி மாடியைக் கொண்ட 2 கட்டிடங்களுடனான 12 கடையறைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2024 நவம்பர் 13 திகதி 02 மாடிகள் கொண்ட 36 கடையறைகள் விளைவற்றுக் காணப்பட்டதுடன், தனிமாடி இரண்டு கட்டிடங்கள் 12 கடையறைகள் வர்த்தக நடவடிக்கைக்காக திறக்கப்பட்டிருந்தது. 2025 மே 20 | ரியாத் வர்த்தக தொடர் கட்டிடத்திற்குரிய கடையறைகள் 2000 மற்றும் 2012 ஆண்டுகளின் போது டென்டர் அழைக்கப்பட்டு வியாபாரிகளுக்கு வழங்கப்பட்ட போதிலும், வியாபாரம் வெற்றியடையாமையால் அந்தக் கட்டிடங்கள் இதுவரை பயன்படுத்தப்படவில்லை. அதன் பின்னர் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமையால் இந்தக் கட்டிடங்கள் சிதைவடைந்து காணப்பட்டது. நீண்ட காலமாக கட்டிடம் பயன்படுத்தப்படாமையால் மின்சாரம் மற்றும் நீர் பயன்படுத்தப்படாவிடினும், மாதாந்தம் அறவிடப்படுகின்ற | இந்தக் கடையறைகள் உரிய பிரதேச சபைகளுக்கு உரித்தாக்குவற்கும், அங்கீகாரமற்ற வதிவோரை அகற்றுவதற்கும், நிலுவை வாடகையை விரைவாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவில் ரூபா 2.53 மில்லியனிற்கான நிலுவை வாடகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும், உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால், அந்தத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதில் சிக்கல் நிலைமையொன்று காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | சேவைக் கட்டணம் சேர்ந்துள்ளமையால் இங்கு நீர் மற்றும் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக கட்டிட திருத்தி வேலையின் பின்னர் நீர் மற்றும் மின்சாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியுள்ளது. | |
| (உ) | தரமான நீர் வழங்குவதை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் ரூபா 80 மில்லியன் செலவிடப்பட்டு 30 பின்னோக்கிய வடிகட்டல் இயந்திரங்கள் வழங்குதல், நிர்மாணித்தல், பொறுத்துதல் மற்றும் அதனொடு சேர்ந்த வசதிகள் வழங்குவதற்காக 2015 ஆண்டின் போது அதிகாரசபை மற்றும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்துடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இயந்திரத்தை பொருத்தும் போது இடப் பரிசோதனை மற்றும் மதிப்பாய்வு மேற்கொண்டு இடங்கள் தெரிவு செய்யப்படாமையால் 03 சுத்திகரிப்பு இயந்திரங்கள் விளைவற்று காணப்பட்டதுடன், பீ வலையத்தில் 02 இயந்திரங்கள் பொறுத்தப்பட்ட பின்னர் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. பீ வலையத்தில் 03 இயந்தரங்கள், எல் வலையத்தில் 02 இயந்திரங்களாக மொத்தம் 05 இயந்திரங்கள் 2025 மே 20 திகதி அளவில் செயற்படாத நிலைமையில் காணப்பட்டது. நீர் வழங்கல் திணைக்களத்துடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் படி 13 ஆவது பிரிவின் பிரகாரம் 10 வருடங்கள் நீ சுத்திகரிப்புச் செயற்திட்டத்தின் அத்தியவசியமான பராமரிப்பு அலுவல்கள், சேவை வழங்குதல் மற்றும் உதிரிப் பாகங்கள் | இந்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் அனைத்தும் உடன்படிக்கையொன்றின் மூலம் விவசாய அமைப்புக்களுக்கு சாட்டப்பட்டுள்ளது. செயற்படாத நிலைமையில் காணப்படுகின்ற நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை பரிசோதனை மேற்கொண்டு அத்தியவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு சேவையும் மேற்கொள்ளப்பட்டு தரும்படி, சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு பல சந்தர்ப்பங்களல் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. | இயந்திங்களை பொறுத்தும் போது இடப் பரிசோதனை மற்றும் மதிப்பாய்வு மேற்கொள்ளாமல் இடங்களை தெரிவு செய்தல் தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன், விளைவற்றுக் காணப்படுகின்ற இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வழங்குதல் அந்தத் திணைக்களத்தினால் இணங்கியிருந்த போதிலும், இங்கு குறிப்பிட்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

## 3.6 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மகாவலி வலையத்தில் தொங்கு மின்வேலி நிர்மாணித்தல் ஆரம்பத்தில் மகாவலி அதிகாரசபை மற்றும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுடன் இணைந்து பீ வலையத்தில் அரலகன்வில, கந்தகாடு, சிங்கபுர இடையே மற்றும் சீ வலையத்தில் மகாவலி பயிற்சி நிலையத்தை சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இங்கு பெறுகை வழிகாட்டல் கோவையின் கைநூலின 3.5(உ) பிரிவிற்கு புறம்பாக ஒப்பந்த வேலை வழங்கப்பட்டு ரூபா 22.07 மில்லியன் மொத்த ஒப்பந்த வேலைத் தொகையையும் வேலையை பூர்த்தி செய்வதற்கு முன்னர் முற்பணம் என செலுத்தப்பட்டிருந்தது.<br><br>இந்த யானை வேலிகள் உரிய முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என அதிகாரசபையின் தொழில்நுட்பப் பிரிவின் அல்லது ஏனைய தரப்பினரினால் உறுதிப்படுத்தியிருக்காமை மற்றும் உரிய முறையில் பில்பத்திரங்கள் சமர்ப்பிக்காமையால் முற்பணத்தினை தீர்க்க முடியாமல் உள்ளது. கணக்காய்வினால் பௌதீக ரீதியாக பரிசோதனை செய்த இடங்களில் யானை வேலிகள் அழிவடைந்து காணப்பட்டதென மேலும் அவதானிக்கப்பட்டது. | பீ வலையத்தில் அரலகங்வில விதைப் பண்ணையில் யானை வேலி நிர்மாண வேலைக்காக புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு வழங்கியிருந்த ரூபா 4,840,272.41 இற்கான பெறுமதியுடைய முற்பணம் தற்போது தீர்க்கப்பட்டுள்ளது.<br>பீ வலையத்தில் கரப்பொல, கந்தகாடு, சிங்கபுர இடையே யானை வேலி நிர்மாணிப்பதற்காக புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு வழங்கியிருந்த ரூபா 9,239,319.60 இற்கான பெறுமதியுடைய முற்பணத்தை தீர்ப்பதற்கான தொழில்நுட்ப அறிக்கை (அளவைப் பத்திரம் - Measurement sheet) சமர்ப்பிக்கப்படாமையால் முற்பணம் தீர்க்கப்படவில்லை.<br>சீ வலையத்தில் விவசாய பயிற்சிப் பண்ணையைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த யானை வேலிக்காக வழங்கியிருந்த ரூபா 8,000,000 இற்கான முற்பணத் தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.<br>புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டிருந்த இந்த யானை வேலி நிர்மாணிக்கும் போது ஏற்பட்டிருந்த தொழில்நுட்ப மற்றும் ஏனைய வழுக்கல் காரணமாக இதனை இலங்கை மகாவலி அதிகாரசபையினால் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை.<br>இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு இந்த யானை | பூர்த்தி செய்யப்படாத வேலைகளை பூர்த்தி செய்து விரைவாக முற்பணங்களை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன்,<br>பெறுகை வழிகாட்டல் கோவைக்கு புறம்பாக முற்பணங்கள் வழங்கியிருந்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வேலியை மீண்டும் மறுசீரமைத்துத் தரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**3.7 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வளவ வலையத்தின் 10 வட்டார அலுவலகங்கள் காணப்பட்ட போதிலும், குறைந்த வருமானம் உடையோருக்கு உதவி வழங்களின் கீழ் கழிவறைகள் நிர்மாணித்துக் கொடுப்பதற்காக வலையத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 27.5 மில்லியன் மொத்தத் தொகையும் கொலன்ன அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதேபோல் கழிவறைகள் நிர்மாணிக்கும் போது இதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்டிருந்த செய்முறையின் படி நலன் பெறுவோருக்கு அந்தப் பணத்தை வழங்காமல் விவசாய அமைப்புக்களுக்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தமையால், ஒரு கழிவறைக்காக ரூபா 122,452 தொகையொன்று மிகையாக வழங்கப்பட்டிருந்தது. இதற்காக நலன் பெறுவோர் தெரிவு செய்யப்பட்ட முறை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது, குறைந்த வருமானமுடையோர் அல்லாத நபர்களுக்கும் உதவி வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | கொலன்ன வட்டாரத்தில் கழிவறைகள் நிர்மாணிக்கும் செயற்பாடுகளுக்காக செலவுத் தலைப்பு 2815 இன் துணை இலக்கம் 3.1.9 இன் கீழ் ரூபா 31.040 மில்லியனிற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அந்த தொழிற்பாடுகள் விவசாய அமைச்சுக்களுக்காக ஒப்பந்த வேலை வழங்குவதன் மூலம் நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை திட்டமிடப்பட்டது. | ஏனைய வலையங்களில் செயற்படுத்தப்பட்டவாறு நலன் பெறுவோருக்கு கட்டம் கட்டமாக பணம் வழங்குவதற்கும், பொருத்தமான நபர்களை முறையான குழுவொன்றின் மூலம் இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தகைமையில்லாத நபர்களுக்கு உதவி வழங்கியதற்காக விசாரணையொன்று மேற்கொண்டு, அந்த விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (ஆ) | பகமூன பஸ் நிலையம் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை உடன்படிக்கையின் படி 2022 ஏப்ரல் 04 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2025 மே 20 திகதி அளவில் நிர்மாண வேலை கைவிடப்பட்டிருந்தது. | இந்த ஒப்பந்த வேலை நிர்மாண வேலைக்கான மூலப்பொருட்களின் விலை அதிகரித்தல் மற்றும் நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியின் மத்தியில் நிதி ஏற்பாடுகள் காணப்படாமையால் இரு தரப்பினர்களின் இணக்கத்துடன், | திட்டமிடப்பட்ட கருமங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2023.05.12 திகதி இரத்துச் செய்யப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட நகரத் திட்டம் கிடைத்தவுடன், செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது அதற்காக பணம் ஒதுக்கி உத்தேச பஸ் நிலையத்தின் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என அறிவிக்கின்றேன். | |
| (இ) | ரன்கிந்த சுற்றுலா விடுதியின் திருத்த வேலைக்காக 2018 திசெம்பர் 24 திகதி ரூபா 12.11 மில்லியனிற்கான ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்த உடன்படிக்கையின் படி 2019 ஜுலை 19 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும, ஒப்பந்த வேலை கைவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 3.45 மில்லியன் வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணமாக செலுத்தப்பட்டிருந்ததுடன், தற்போது வங்கிப் பிணைமுறியின் காலமும் முடிவடைந்திருந்தமையால் இந்தத் தொகையை இழப்பீடு செய்வதற்கு அதிகாரசபைக்கு முடியாமல் உள்ளது. | இந்த ஒப்பந்த வேலையை இரத்துச் செய்த பின்னர் இது தொடர்பாக (CGF) நிதியத்துடன் கலந்துரையாடி வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட மீதித் தொகையாகிய ரூபா 1,536,926.33 தொகை மற்றும் செயலாற்றுகை பிணைமுறித் தொகை ரூபா 605,390 தொகை 2024.09.12 திகதி அறவிடப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் புதிய நிர்மாண வேலைகளுக்காக போதியளவு பணம் ஒதுக்கியிருக்காததுடன், எதிர் காலத்தில் இதற்காக போதிய ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டால், இந்த கருமத்தை பூர்த்தி செய்ய முடியும். | ஒப்பந்தகாரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கும், பொறுப்பற்ற முறையில் செயற்பட்டிருந்த உத்தியோத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும், பூர்த்தி செய்யப்படாத வேலைப் பகுதிகளை பரிசோதனை செய்து விரைவாக பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்குச் சொந்தமான குண்டசாலை வராப்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள காணியொன்றில் புதிய கட்டிடமொன்று நிர்மாணித்து வழங்குவதற்காக இலங்கை மகாவலி அதிகாரசபையினால் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளாமல், பொறியியல் அலுவல்களுக்கான உசாத்துணைப் பணியகத்திற்கு ரூபா 32.1 மில்லியனிற்கான ஒப்பந்த வேலையொன்று வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஏற்பாட்டுத் தொகை போதியளவாக காணப்படாமையால் | இந்தக் கருமத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூபா 32,096,839.32 தொகையும், முதலாவது கட்டமாக தரை மாடியின் சிலப் மட்டம் (Slab Level) வரை நிர்மாணிப்பதற்காக மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டிட அலுவலகத்தின் மீதியான வேலைகளுக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருந்தமையால் எதிர்காலத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏற்பாடுகள் கிடைத்த பின்னர் நிர்மாண வேலைகளை விரைவாக பூர்த்தி செய்து அலுவலக விடயங்களை | உடன்படிக்கை மேற்கொள்ளாமல் ஒப்பந்த வேலைகள் வழங்குவது தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். நிர்மாணிக்கப்பட்டுள்ள மாடியின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கும் கட்டிடத்தை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இணங்கியிருந்தவாறு 04 மாடிக் கட்டிடம் நிர்மாணிக்காமல் தரை மாடி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதுவும், பூரணமற்ற முறையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை குறிப்பிட்ட கட்டிடத்தை 2025 மே 20 திகதி அளவிலும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதென அதிகாரசபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த கட்டிடத்தின் நிர்மாண வேலையை பூர்த்தி செய்வதற்காக தேவையான ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் 2021.10.06 திகதி அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பித்திருந்நததுடன், அதற்கான அமைச்சரவை தீர்மானமாவது தற்போது காணப்படுகின்ற அலுவலக இடவசதிகளையே முகாமைத்துவம் செய்துகொள்ளும் படி அறிவிக்கப்பட்டுள்ளது என. | |

**3.8 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை மகாவலி அதிகாரசபையின் 147 பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 4859 ஆக காணப்பட்டதுடன், அத் திகதியில் உள்ளவாறு 113 பதவிகளில் 1517 வெற்றிட எண்ணிக்கையொன்று காணப்பட்டது. அதன்படி, அந்த வெற்றிடங்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 31 சதவீதமான கூடிய பெறுமதியொன்று காணப்பட்டன. | திறைச்சேரிச் செயலாளரின் ‘‘அரச செலவுகளை கட்டுப்படுத்தல்’’ என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்த தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 03/2022 மற்றும் 2024.04.26 திகதிய மற்றும் பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 05/2022 மற்றும் 2022.09.02 திகதிய கடிதத்தின் மூலம் அரசாங்க செலவுகளை தீவிரமாக கட்டுப்படுத்துவது தொடர்பாக வழங்கப்பட்ட அறிவுரையின் படி அதிகாரசபையில் காணப்பட்ட வெற்றிடங்கள் 2022 ஆண்டு முதல் நிரப்புவதற்கு தற்காலிகமாக இடைநிறுத்தல் அனேகமானோர் இந்தக் காலப் பகுதியில் ஓய்வு பெறல் மற்றும் வெளிநாடு செல்லல் மற்றும் சேவையிலிருந்து விலகல் ஆகிய காரணங்களினால் வெற்றிட சதவீதம் கூடிய பெறுமதியை கொண்டிருந்தது. | நிலவுகின்ற வெற்றிடங்களை மீளாய்வு செய்து தேவையான உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்டிருக்காத 06 பதவிகளுக்காக நிரந்தர | பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 மற்றும் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மாத்திரம் |

| | | |
|---|---|---|
| அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், அந்தப் பதவிகளை முறைப் பிரகாரம் அங்கீகரித்துக்கொள்வதற்காக அதிகாரசபை மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 25/2014(I) படி அதிகாரசபை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) சேவைத் தொகுதியின் (MA 1-2) முதல் ஆரம்ப தொழில்நுட்பம் அல்லாத சேவை தொகுதியில் (PL 1) வரை தொடர்ச்சியாக 180 நாட்கள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அந்த நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னர் அந்தந்த நிறுவனங்களின் பதவியணியை நாளதுவரை ஆக்குவதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு உரிய தகவல்கள் சமர்ப்பிக்கும் படி அந்த சுற்றறிக்கை மூலம் அறிவுரை வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய தகவல்கள் அனுப்பிய பின்னர் கடிதம் கிடைக்கப்பட்டது என மாத்திரம் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்பதற்கும், அங்கீகாரிக்கப்படாத பதவிகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.9 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை மகாவலி அதிகாரசபையின் வளவ வதிவிட திட்ட முகாமையாளர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த கப் வண்டியொன்று 2004 – 2005 காலப் பகுதியில் அங்கீகாரமின்றி வெளித் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தென முன்னைய ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. அதேபோல், அதிகாரசபையினால் சனாதிபதி செயலகத்திற்கு வழங்கியிருந்த டபல் கப் வண்டியொன்றும் 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் | 2004 – 2010 இடைப்பட்ட காலப் பகுதியில் கௌரவ மகாவலி அபிவிருத்தி அமைச்சரின் பதவியணியினருக்கு இந்த வாகனம் வழங்கப்பட்டிருந்ததென உறுதிப்படுத்தப்படுவதுடன், இந்த வாகனத்தை திருப்ப அதிகாரசபைக்கு உரித்தாக்கிக்கொள்வதற்கான தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு தேவையான சட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும், விசேட மோசடி | வெளித் தரப்பினர்களுக்கு வாகனத்தை வழங்கியது தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சனாதிபதிச் செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள வாகனத்தை திருப்பி எடுப்பதற்கு அல்லது அந்த அலுவலகத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

திருப்பிப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், வாகனம் சனாதிபதி செயலகத்திற்கு வழங்கியிருந்த திகதியை உறுதிப்படுத்துவற்கான சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

விசாரணைப் பிரிவினால் (அம்பிலிப்பிடிய) விசாரணை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது கடமையிலுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை பல சந்தர்ப்பங்களில் விசாரணை அலுவல்களுக்குரிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக அழைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த கப் வண்டி காணாமல் போதல் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(1) இன் படி நடவடிக்கை எடுப்பதற்காக அமைச்சுச் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டதுடன், அமைச்சுச் செயலாளரினால் நிதிப் பிரமாணம் 104(1) விசாரணை அலுவல்கள் மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு உரிய விசாரணை அலுவல்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.